பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 04 சனிக்கிழமை (20.09.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 297

# கிளிநொச்சி, முல்லைத்தீவு உணவு விநியோகம் பாதிப்பு

## ஓமந்தை ஊடாக போக்குவரத்து தடங்கல்

வவுனியா, செப்ரெம்பர் 20

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத் துக்கு - ஓமந்தைச் சோதனைச் சாவடி ஊடான - போக்குவரத்து கடந்த சில தினங்களாகக் குழம்பியிருப்பதால் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக் கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விநியோகத்திலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் (12ஆம் பக்கம் பார்க்க)

## நியூயோர்க்கில் மஹிந்தவுக்கு எதிராக புதனன்று ஆர்ப்பாட்டம் நடத்த ஏற்பாடு

நியூயோர்க், செப்.20

ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடரில் பங்கு பற்றுவதற்கு நியூயோர்க் வரும்போது இலங்கை ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷாவுக்கு எதிராக எதிர் வரும் புதன் கிழமை கண்டனப் பேரணி நடத்தப்பட உள்ளது.

நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. சபைக்கு எதிராக அன்று முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை இந் தப் பேரணி நடத்தப்படும்.

அமெரிக்காவில் இயங்கும் இனப்படு கொலைக்கு எதி ரான தமிழர்கள் அமைப்பு இந்தப் பேரணியை நடத்துவ தற்கு முன் அனுமதி பெற்றுள்ளது.

வன்னியில் இருந்து தொண்டு நிறுவ னங்களை

(12ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை கொமோண்டோ அணியின் முன்நகர்வு இரணைதீவில் முறியடிக்கப்பட்டது

### புலிகள் தரப்பில் அறிவிப்பு

கிளிநொச்சி , செப்.20

இரணைதீவு நோக்கி இலங்கைக் கடற்படையின் கொமாண்டோ அணியினர் நேற்று முன்தினம் வியாழக் கிழமை மேற்கொண்ட முன்னகர்வு தங்களால் முறியடிக் கப்பட்டதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இத் தாக்குதலில் கடற்படைக் கொமாண்டோ அணி யின் இரண்டு படகுகள் சேதமாக்கப்பட்டதுடன் கடற்படை யினருக்கு பெரும் இழப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் விடுதலைப்புலிகள் அறிவித்ததுள்ளனர்.

இத் தாக்குதல் குறித்து விடுதலைப்புலிகள் அறிவித் துள்ளதாவது:-

பத்து நீருந்து விசைப்படகுகளும் 20 கூகர்படகுகளு

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு உட்பட பல இடங்களில் 'டெங்கு'க் காய்ச்சல் பரவும் அபாயம்

கொழும்பு, செப். 20

கொழும்பு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளில் டெங்குக் காய்ச்சல் வேகமாகப் பரவும் அபாயம் ஏற்பட்டிருப்பதாக அறி விக்கப்படுகின்து.

'டெங்கு'க் காய்ச்சல்பரவும் அபாயம் உள்ள 11 இடங்கள் இனங்காணப்பட்டுள்ளன என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை, மாத்தளை, அம்பாந் தோட்டை, கேகாலை, புத்தளம், அநுராதபுரம், திருகோண மலை, மட்டக்களப்புஆகிய மாவட்டங்களிலேயே டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் உள்ளது என சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் இருந்து சுமார் 5,000

(12ஆம் பக்கம் பார்க்க)

## விசுவமடு விமானத் தாக்குதலில் அப்பாவிப் பெண் உயிரிழப்பு!

கொழும்பு, செப். 20

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள விசுவமடு மக்கள் குடியிருப்புகள் மீது ஸ்ரீ லங்கா வான்படையின் விமானங் கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் அப்பாவிப் பெண் ணொருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். மேலும் இரு பெண்கள் காயமடைந்துள்ளனர். (12ஆம் பக்கம் பார்க்க)

## காரில் சென்ற ஐந்து இளைஞர்களை கொழும்பில் காணவில்லையெனப் புகார்!

### மருதானை, கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையங்களில்

கொழும்பு, செப்.20

கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட பாடசாலைக ளில் பயிலும் மூன்று தமிழ் மாணவர்கள் மற்றும் இரண்டு முஸ்லிம் இளைஞர்களுமாக ஐந்து பேரை அவர்கள் பயணித்த காருடன் காணவில்லை (12ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் இங்கு திங்களன்றே உத்தியோக பூர்வமாக வெளிவரும்

யாழ்ப்பாணம், செப். 20

கடந்த ஓகஸ்ட் 17 ஆம் திகதி நடைபெற்ற 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் யாழ். மாவட்டத்துக்கான முடிவுகள் நாளை மறுதினம் திங்கட் கிழமை இங்கு உத்தி யோக பூர்வமாக வெளியாகும் என்று யாழ். கல்வித் திணைக் கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு மாவட்டப் பாடசாலைகளுக்கான முடிவுகள் நேற்று அந்தந்தப் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டி ருந்தன.

ஏனைய மாவட்டங்களில் (12ஆம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவில் கரைசேர்ந்த இந்தியரின் சடலம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது

### தலயாத்திரையாக இராமேஸ்வரம் வந்தவராம்

யாழ்ப்பாணம், செப் 20

நெடுந்தீவுக் கடற்கரையில் கடந்த 13ஆம் திகதி கரை ஒதுங்கிய இந்தியப் பிரஜையின் சடலம் நேற்று இனங் காணப்பட்டது.

இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்த அவரின் மருமக்கள் இருவரும் பேரன் ஒருவரும் அவர்களது உதவியாளரான பெண் சட்டத்தரணியும் யாழ்.ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்த பட்டேல் கோவிவாஸின் (வயது 77) சடலத்தை அடையாளம் காட்டினர்.

கடந்த 8ஆம் திகதி திருப்பதிக்கு தலயாத்திரை புறப்பட்ட இவர் காணாமல் (12ஆம் பக்கம் பார்க்க)

## அகில இலங்கை ரீதியில் முதலாவது இடம் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை

### மீசாலை வீரசிங்க மகா வித்தியாலய மாணவன்



யாழ்ப்பாணம், செப்.20

இவ்வருடம் நடை பெற்ற ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் மிகவும் கடினமாக இருந்ததால் பரீட் சையில் சித்தியடை வேன் என்ற நம் பிக்கை இருந்தது. ஆனால் அகில இலங்கை ரீதியில் முதலிடம் கிடைக்கு மென எதிர்பார்க்கவில்லை.

செவ்வி கண்டவர்: தென்னவன்

அகில இலங்கை ரீதியில் முதலிடம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்ச்சி கொள் கிறேன். எனது மகிழ்வில் எனது பெற்றோர், இவ் வித்தியாலய அதிபர், வகுப்பாசிரி யைகள், 'ரியூசன்' மாஸ்டர் ஆகியோருடன் ரியூட்டரியும் பக்கத்துணையாக இருந்தது.

அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற போதிலும் என்னை இந்த நிலைக்கு உயர்த்திய இப் பாடசாலையை விட்டு உயர் கல்விக்காக வேறு பாடசாலைக்கும் செல்லமாட்டேன்.

இவ்வாறு ஐந்தாம் தர புலமைப் பரிசில் தமிழ் மொழி மூலப் பரீட்சையில் அகில இலங்கைரீதியில் முதலிடம் பெற்ற மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவன் **தர்மலிங்கம் பாசுபதன்** உதயனுக்கு வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்தார்.

என்னுடைய கல்வி வளர்ச்சிக்கு உறு

(11ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு இராணுவ உதவி: எதிராக தமிழ்நாட்டில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, செப். 20

தமிழர்களின் துயர் நீக்க தம்மால் இயன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகை யில் தமிழ்நாட்டில் இயங்கும் தமிழ்ப் படைப் பாளிகள் முன்னணி ஒரு தொடர் முழக்க ஆர்ப்பாட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளது.

நாளை மறுதினம் திங்கட்கிழமை (22 ஆம் திகதி) முற்பகல் 10 மணி முதல் மாலை 5 மணிவரை சென்னை சேப்பாக்கம் விருந் தினர் மாளிகை எதிரில் இந்த ஆர்ப்பாட் டம் இடம்பெறவுள்ளது என்று அந்த அழைப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசிற்கு இராணுவ உதவி களை மத்திய அரசு வழங்குவதைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும், இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ள இந்தியப் படைப் பயிற்

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அடைக்கலம் கோரிவரும் தமிழர்களை பிரிட்டன் ஏற்றுக்கொள்ள வேண்டும்

## பிரி. மனித உரிமை அமைப்பு வலியுறுத்து

லண்டன், செப் 20

அடைக்கலம் தேடிவருபவர்கள்மீதும் பிரிட்டனுக்குள் வரும் வெளிநாட்டவர் மீதும் கட்டுப்பாடுகளைப் புகுத்த திட்டம் தீட்டுவதானது அந்த மக்களின் மனித உரிமைகளை நசுக்குவதான செயற்பாடாகும் என்று பிரிட்டனிலுள்ள மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு பிரிட்டிஷ் அரசைக் கண்டித்திருக்கிறது.

பிரிட்டனுக்குள் வரும் மக்களை நிர்வாக ரீதியில் தடுப்புக்காவலில் வைக்கும் இம் முயற்சியைக் கைவிடும்படி ஐரோப்பிய நாடுகளுக்கான இந்நிறுவனத்தின் குழு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த அமைப்பின் மனித உரிமைகள் ஆணையாளர் தோமஸ் ஹமர்போர்க் இவ்வருடம் பெப்ரவரி, ஏப்பிரல் மாதங்களில் உள்வரவு தடுப்பு முகாங்களுக்கு விஜயம் செய்திருந்தார். அரசு சாராநிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் உள்துறை அமைச்சின் அதிகாரிகளையும் சந்தித்திருந்தார். இதன் காரணமாக அவர் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் அடைக்கலம் கோரிவருபவர்களின் உரிமைகளுக்கு முறையான மதிப்பு அளிக்கும் விதத்தில் அரசின் நடவடிக்கைகளில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளார். தடுத்துவைக் கப்பட்டுள்ளவர்கள் விடயத்தில் புதிய விசேட சட்ட விதிகளை அறிமுகப்படுத்தி அவர் களின் நிலைமைகளை சீராக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். தடுப்புக் காவல் என்பது சிறுவர்கள் விடயத்தில் தவிர்க்கப்பட வேண்டும். வேறு விதமான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். சட்ட உதவிகள் வழங்கப்படுவது குறைக்கப்படு வதையும் அவர் கண்டித்துள்ளார். அடைக்கலம் கோரி வருபவர்கள் வரவேற்பு நிலையங்களில் வைக்கப்படவேண்டும். தடுப்பு முகாங்களில் அப்புறப்படுத்தும் நிலையங்களிலும் அவர்கள் வைக்கப்படக்கூடாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

உள்துறை அமைச்சு இலங்கையில் இருந்துவரும் தமிழ் இனத்தவர்களுக்கு அடைக்கலம் வழங்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தியுள்ளார்.

அடைக்கலம் கோருபவர்களை சுதந்திர மட்டத்தில் அளிக்கப்படும் வாக்குறுதிகளின் அடிப்படையில் கட்டாய நாடு கடத்தலுக்குள்ளாக்கப்படும் நடைமுறை கைவிடப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். இம்மாதிரி செய்யும் போது அவர்கள் மோசமாக நடத்தப்படுவதுடன் வதைகளுக்குள்ளாக்கப்படுவது நிரூபிக்கப்பட்டுள்ளது என்றார் அவர். வதைகள், மோசமாக நடத்தப்படுவது போன்ற நிலைகளிலிருந்து விடுதலை என்பதே ஐரோப்பிய சமூகத்தின் அடிப் படை நிலைப் பாடா கும் என்றார். (ப)

## பாராட்டு மழையில் நனையும் பாசுபதன்

யாழ்ப்பாணம், செப்.20

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் தமிழ் மொழியில் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவன் தர்மலிங்கம் பாசுபதனுக்கு மாவட்டத்தின் அனைத்துப் பகுதியிலிருந்தும் பாராட்டுக்களும் பரிசுகளும் குவிந்த வண்ணமுள்ளன.

தென்மராட்சிக் கல்வி வலயத்தினர் வித்தியாலய அபிவிருத்திச் சபையினர் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோர் நேரடியாகவும் ஏனைய பகுதிகளிலிருந்து தொலை பேசி மூலமும் வாழ்த்துக்களை தெரிவித்த வண்ணமுள்ளதைக் காணமுடிந்தது.

சிலிங்கோ காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினர் நேரடியாக வந்து மாணவனை வாழ்த்தி பரிசுப் பொதியினை வழங்கிச் சென்றனர்.

(அ-207-231)

## சுண்டுக்குளி மகளிரில் இன்றும் நாளையும் இலவச 'கேக்' கண்காட்சி

யாழ்ப்பாணம், செப்.20

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் மாணவிகள் இருவரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இலவச 'கேக்' கண்காட்சியும் விற்பனையும் இன்றும் நாளையும் கல்லூரி கிறேஸ் ஹென்மன் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி துஷிதரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கண்காட்சியைத் திறந்து வைப்பார்.

காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை கண்காட்சி இடம்பெறும். என்றும் -

'கேக்' தயாரிப்பு, நகை அலங்கரிப்பு, மணப்பெண் அலங்கரிப்பு உட்பட பல்வேறு அம்சங்களைக் கொண்டதாக இக் கண்காட்சி அமைந்திருப்பதாகவும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (அ-1)


**காணவில்லை**

மாவெள்ளை நிறமுடைய பசுமாடு ஒன்று காணவில்லை. இதைக்கண்டவர்கள் கீழ் வரும் விலாசத்திற்கு அறியத்தரவும்.

சன்மானம் வழங்கப்படும்.

30, யாழ்வீதி, பெருமாள் கோயில் முன்வீதி,
யாழ்ப்பாணம், தொ.பே:0602217987



இப்போது விற்பனையில்

**சுடர் ஒளி**

THE SUDAR OLI

(செப் 07 - செப் 13, 2008)

- வன்னியில் புதுத் திருப்பம்
- இலங்கை விவகாரத்தில் கையாலாகாத இந்தியா!
- மாரி மழையுடன் அவலம் உச்சநிலை....
- வாளேந்திய வரவேற்பு
- நிற வெறிக்கு ஒபாமா பலியாகிவிடுவாரா?
- நான் கண்ட பாரதி- எஸ்.டி.சிவநாயகம் எழுதிய தொடர்.
- பாலை வனத்துப் பூ- (நெல்லியடி பொன்.சுகந்தன் எழுதியது) (சிறுகதை)
- இயந்திர மனிதனுக்கு சவாலாக செயற்கை உயிரியல் மனிதன்?-டாக்டர் ச.முருகானந்தன்

**மற்றும் நீங்கள் விரும்பிப் படிக்கும் பல சுவையான அம்சங்களுடன்**

இப்போது விற்பனையில்

உங்கள் உதயன் முகவர்களிடம் கேட்டு வாங்குங்கள்.


# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்ரன் இராசலிங்கம் பிலோமினா (புனிதம்)



மிருசுவில், புனித காணிக்கை மாதா கோயிலடியைச் சேர்ந்த திருமதி அன்ரன் இராசலிங்கம் பிலோமினா (புனிதம்) 12.09.2008 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அன்ரன் இராசலிங்கத்தின் அன்பு மனைவியும், அன்ரன் சாந்தராசா, திருமதி அன்ரில்லா (இத்தாலி), ஆன் மேரி (இத்தாலி, முன்னாள் முன்பள்ளி ஆசிரியை, தவசிகுளம் மிருசுவில்), மேரி ஜெசிந்தாராணி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான பெனடிக்ற், இராஜேந்திரம் மற்றும் திருமதி பர்னாந்து விறிசித்தம்மா (பெரியக்கா), அருளானந்தம் (ஆனந்தம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயநேசன் (இத்தாலி), ஜெனிற்றா ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெனுசியா, ஜெனோசன், திஷியான ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (20.09.2008) சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு புனித காணிக்கை அன்னை ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு அல்லாரை செபமாலை மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.அ.சாந்தராசா
(சாந்தா, மகன்)

தவசிகுளம்,
மிருசுவில்.

## நடராசா ராசம்மா



சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நடராசா ராசம்மா நேற்று (19.09.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் நடராஜாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கதிர்காமநாதன் (ஓய்வுபெற்ற உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்), செல்வரட்ணம், சரஸ்வதி, ஞானம்பிகை, கனகநாயகம், அருணகிரிநாதன், காமதேனு ஆகியோரின் அன்புத்தாயாரும், ஜெகதீஸ்வரி, நடேசன், ஸ்ரீபாலச்சந்திரன், வடிவேல், ஜெயதேவி, உமாலோகராணி, குமாரகுலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் முகுந் தன்- யசோதா, விமலேஸ்வரன்- மீனா, இராசகுமார்- கன்னிகா, காயத்திரி, சிவாத்மிகா, சுபீகரன், விக்னன், நீதினி, அருண்ராஜ், சுரேஸ்ராஜ்,வினோத்ராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆகாஷ், ஆஷிகா, டினிசியா, கிபீசன், கிசோக் ஆகியோரின் பூட்டி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2008) சனிக்கிழமை மு.ப 10மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்ற பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வட்டு கிழக்கு,
சித்தங்கேணி.

(78616)

தகவல்:
குடும்பத்தினர்.

## கோப்பாய் மாணவர்களுக்கு இலவசக் கல்வி உபகரணங்கள்

யாழ்ப்பாணம், செப். 20

யாழப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி பெயரிலான அறநிதியத்தில் இருந்து கோப்பாய்ப்பகுதியில் உள்ள 68 மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் இன்று வழங்கப்படும்.

யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியின் முதலாவது பீடாதிபதி தி.கமலநாதனின் பிறந்த நாள் இன்றாகும். அதனையொட்டி வசதி குறைந்த 68 மாணவர்களுக்கு காலணி உட்படபாடசாலை உபகரணங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. கல்வியியல் கல்லூரி மாணவி ஒருவருக்கு மூக்குக் கண்ணாடியும் வழங்கப்படும்.

இன்று காலை கல்வியியல்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இந் நிகழ்விற்கு பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் தலைமை வகிப்பார். லயன்ஸ் வலயத்தலைவர் லயன் ஜெயபாலன் கல்வி உபகரணங்களை வழங்கு வார்.

நிகழ்வில் லயன் டாக்டர் வி.தியாகராசாவும் பங்கு பற்றுவார் (அ)


**படிவம்**


உயர் தொழில் நுட்ப நிறுவனங்களின் (SLIATE) 2009 கல்வி ஆண்டுக்கு மாணவர் அநுமதிக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

Bharathy Pathippakam.


# மரண அறிவித்தல்

## நா.ஆ.நமசிவாயம்

(புங்குடுதீவு, திடீர் மரண விசாரணை அதிகாரி சமாதான நீதிவான்)



புங்குடுதீவு 1ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 5ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நா.ஆ.நமசிவாயம் இன்று (19.09.2008) வெளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் (ஸ்தாபகர், புங்குடுதீவு ஸ்ரீசித்தி விநாயகர் மகாவித்தியாலயம், புங்குடுதீவு மேற்கு, பெரியபுலம் ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலயம்), வேலாசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் மங்கயர்க்கரசியின் அன்புக்கணவரும் பிரேமகுமார் (Retired Chief Clerk), சத்தியகுமார் (France), மோகனகுமார் (France), சுரேஸ்குமார் (பதிவாளர் நாயகம் அலுவலகம் கொழும்பு),தேவிகா(பிறப்பு, இறப்பு திருமணப்பதிவாளர் புங்குடுதீவு), ஆகியோரின் அன்புத் தந்தையும் தேவமலர் (ஆசிரியை, கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்), சிவகௌரி (France), கலாரஞ்சினி (France); கலாராணி (ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி), ஸ்ரீகாந்தன்(நகர அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்), ஆகியோரின் அன்பு மாமனாரும் லோகபிரசாத், பிரவீணா, யதுர்சன், அர்சினி, நிர்சினி, அனுசன், தனுசா, விஜித்தா, சியாயினி, துசாயினி, சாயுகன், துஷாந், நிதுசாந், ஆகியோரின் பேரனும் சுபராஜாவின் (பதிவாளர் அலுவலகம், கச்சே,ரி யாழ்ப்பாணம்) பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.09.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ.ந.பிரேமகுமார்
(மகன்)

43, சம்பியன் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையடக்கத் தொலைபேசிப் பாவனையாளருக்கு கொமர்ஷல் வங்கியின் மீள் நிரப்பு சேவை

யாழ்ப்பாணம், செப்.20

கொமர்ஷல் வங்கியினர் வாடிக்கையாளர்களுக்கு கையடக்கத் தொலைபேசி மீள்நிரப்பல் (RE-LOAD) சேவையினை ஆரம்பித்துள்ளனர்.

வங்கியின் கொம்-ஈ-லோட் (COM.E. LOAD) திட்டத்தின்கீழ் வாடிக்கையாளர்கள் குறுந்தகவல் சேவை (SMS) மூலம் தமது கணக்கிலிருந்து கையடக்கத் தொலைபேசிக்கு 'கிற்' அட்டைக்கு பதிலான தொகையினை பெற்றுக்கொள்ள முடியும்.

கொமர்ஷல் வங்கி வாடிக்கையாளர்கள் தத்தமது பிரிவு வங்கிக் கிளையில் உரிய படிவத்தினைப் பெற்று இச்சேவையினை பெற்றுக் கொள்ள முடியுமென தெரிவிக்கப்பட்டது.

'கிற்-காட்' தட்டுப்பாடு நிலவும் வேளைகளில் வங்கியின் சேவை பயன்படக்கூடியது என வாடிக்கையாளர்கள் தெரிவித்தனர்.

(203-207)

## அரியாலை கிழக்கில்
# விவசாய செய்கையில் ஈடுபடவுள்ளவர்களுக்கு 'சோ ஆ' நிறுவனம் உபகரண உதவி

யாழ்ப்பாணம், செப்.20

அரியாலை கிழக்கில் நெல்விதைப்புக்கு அனுமதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு 'சோஆ' நிறுவனம் விதைநெல் மற்றும் முட்கம்பிகள் என்பவற்றை வழங்கியுள்ளது.

12வருடங்களின்பின்னர் அரியாலை கிழக்குப் பகுதியில் இவ்வருடம் நெற்செய் கைணக்கு அனுமதிக்கப்பட்டு ஆரம்பகட்ட வேலைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

இவ்விவசாயிகளுக்கு உதவும் நோக்கில் 'சோஆ' நிறுவனம் அரியாலை கிழக்கு விவசாய சம்மேளனம், நல்லூர் கமநலசேவைகள் திணைக்களம் மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து அப்பகுதியில் உள்ள வறுமைக்கோட்டிற்கு கீழ் வரும் 28 விவசாயிகளுக்கு தேவையான 79.5 புசல் விதைநெல் மானியமாக வழங்கியுள்ளது. இதன்மூலம் சுமார் 965 பரப்பு நெற்செய்கை பண்ணப்படவுள்ளது.

அத்துடன் கட்டாக்காலிகளிடமிருந்து பயிரைப் பாதுகாப்பதற்காக ரூபா 2 லட்சத்து 92 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான 35 முட்கம்பிச் சுருள்களையும் மானியமாக வழங்கியுள்ளது.

இதன்மூலம் 3 கிலோமீற்றர் வரையான விஸ்தீரணத்திற்கு பாதுகாப்பு வேலி அமைக்கப்படவுள்ளது.

இந்த உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை அரியாலையில் அமைந்துள்ள நல்லூர் கமநல நிலையத்தின் உபஅலுவலகத்தில் அரியாலை கிழக்கு விவசாய சம்மேளனத் தலைவர் தலைமையில் நடைபெற்றது. இத்திட்டத்திற்கான நிதியுதவியை ஐரோப்பிய ஒன்றியத்தின் மனிதாபிமான அமையம் மற்றும் நெதர்லாந்தின் இலங்கைக்கான தூதுவராலயம் என்பன வழங்கியுள்ளன. (202)

## மண்டைதீவுக்கு நடத்தப்படும்
# பாடசாலை நேர பஸ் சேவையை சீராக நடத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.20

யாழ்.பஸ்நிலையத்திலிருந்து மண்டைதீவுக்கு நடத்தப்படும் பாடசாலை நேர பஸ் சேவையை சீராக நடத்துமாறு பிரதேச கல்விச் சமூகத்தினர் கோரியுள்ளனர்.

மண்டைதீவு மகா வித்தியாலயம், மண்டைதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகள் மண்டைதீவுப் பிரதேசத்தில் இயங்கி வருகின்றன. இப்பாடசாலைகளுக்கு செல்லும் ஆசிரியர்கள், மாணவர்களின் நலன்கருதி சேவையை சீராக நடத்துமாறு கோரப்பட்டுள்ளது.

காலையிலும் பிற்பகலிலும் நடத்தப்படும் இந்த சேவை சில வேளைகளில் உரிய நேரத்தில் ஆரம்பமாவதில்லை. சில சமயங்களில் டீசல் இல்லை எனத்தெரிவித்தும் வேறு சில காரணங்களுக்காகவும் இடைநிறுத்தப்படுகின்றது. இதனால் ஆசிரியர்கள் ஏழுகிலோ மீற்றர் தூரம் வரை மண்டைதீவு பண்ணை வீதிச் சந் திக்கு நடந்து வரவேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுகதைப் போட்டியில் யாழ் நூலகருக்கு இரண்டாம் இடம்

கலாசார அலுவல்கள் தேசிய மரபுரிமை அமைச்சு தேசிய மட்டத்தில் அரச ஊழியர்களுக்கு இடையில் நடத்திய ஆக்கத்திறன் போட்டியில் யாழ்.பொதுசன நூலகத்தில் கடமையாற்றும் ஜோர்ஜ் ஜெஸ்ரின், சிறுவர் கதை ஆக்கப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பு ஜோன் டி சில்வா ஞாபகார்த்த திரையரங்கில் கலாசார மரபுரிமை அமைச்சரின் தலைமையில் நடைபெறவுள்ள பரிசளிப்பு நிகழ்வில் வைத்து இவருக்கான விருதும் சான்றிதழும் வழங்கப்படவுள்ளன. (202)

# இல்ல விளையாட்டுப் போட்டிகள் போன்று புத்தாக்கப் போட்டிகளும் நடத்தப்படும்

நல்லூர், செப்.20

பாடசாலைகளில் நடைபெறும் இல்ல விளையாட்டுப் போட்டிகள் போன்று புத்தாக்கப் போட்டிகளையும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற புத்தாக்குநர் ஆணையத்தின் செய்தியாளர் மாநாட்டில் யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டில் இவ்வாறான போட்டிகள் பாடசாலைகளில் நடைபெற ஏற்பாடு செய்யப்படும் எனவும், மாணவர்களின் கண்டுபிடிப்புகளுக்கான ஆற்றலை மேம்படுத்தவும், அவர்களது திறமைகளை வெளிக்கொணரக் கூடியதாகவும் இத்திட்டத்தை செயற்படுத்த வேண்டும் எனவும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (111)

## 'நிக்கொட்' நிறுவனம்
# மூன்று பிரதேச வைத்தியசாலைகளுக்கு அம்புலன்ஸ் வாகனங்களை வழங்கியுள்ளது

நல்லூர், செப்.20

'நிக்கொட்' நிறுவனம் அளவெட்டி, பண்டத்தரிப்பு, கோண்டாவில் பிரதேச வைத்திய நிலையங்களுக்கென மூன்று அம்புலன்ஸ் வாகனங்களை வியாழக்கிழமை கையளித்தது.

13 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் கீழ் 'நிக்கொட்' நிறுவனம் வழங்கிய இந்த அம்புலன்ஸ் வாகனங்களை பிரதேச வைத்தியசாலை வைத்திய் அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டன.

அம்புலன்ஸ் வாகனங்களுடன் 15 மில்லியன் ரூபா பெறுமதியான 12 வகையான மருத்துவ சாதனங்களையும் 'நிக்கொட்' நிறுவனம் வழங்கியுள்ளதாக யாழ். பிராந்திய பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

(202-111)

# மந்திகையில் புதிய மரக்கறிச் சந்தை

வடமராட்சி, செப்.20

மந்திகையில் புதிய மரக்கறிச் சந்தை ஒன்று அடுத்த மாத நடுப் பகுதியில் பருத்தித்துறை பிரதேச சபையினால் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கென வடக்கு மாகாணசபை குறித்து ஒதுக்கப்பட்ட விசேட மாகாண நன்கொடைத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 9 இலட்சத்து 30 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடுசெய்துள்ளது.

மரக்கறிச்சந்தையைப் புதிதாக நிர்மாணிக்கும் பொருட்டு தற்போதைய சந்தைக்கு எதிர்ப்புறத்தில் தற்காலிக மரக்கறிச் சந்தை ஒன்று தனியாருக்குச் சொந்தமான காணி ஒன்றில் அமைக்கப்பட்டுவருகின்றது.

தற்போதைய மரக்கறிச் சந்தைக் கட்டடம் அப்புறப்படுத்தப்பட்டதும் அந்த இடத்தில் புதிய சந்தை நிர்மாணிக்கப்படும். சந்தை வளாகத்தில் உள்ள மீன் சந்தை, இறைச்சிக்கடைகள் அந்தந்த இடங்களிலேயே தொடர்ந்து இயங்கும்.

சுமார் மூன்று மாதகாலத்திற்குள் புதிய மரக்கறிச்சந்தைக்கான கட்டட வேலைகள் நிறைவுபெறும் என எதிர்பார்ப்பதாக பருத்தித்துறை பிரதேசசபை தெரிவித்துள்ளது.

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்



யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு 'நிக்கொட்' நிறுவனம் அம்புலன்ஸ் வாகனங்ள் மூன்றை வழங்கியுள்ளது. வழங்கப்பட்ட அம்புலன்ஸ் வாகனங்களை முதலாவது படத்தில் காணலாம். யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், அளவெட்டி பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி கே.ராதேயனிடமும்- யாழ்.சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் பண்டத்தரிப்பு வைத்தியசாலைக்கான வண்டியை வைத்திய அதிகாரி இ.கனகரத்தினத்திடமும், கோண்டாவில் வைத்திய அதிகாரி ரி.திருத்தேவியிடம் 'நிக்கொட்' முகாமையாளர் எஸ்.சிவருனும் சம்பிரதாய பூர்வமாக கையளிப்பதை அடுத்துள்ள மூன்று படங்களிலும் காணலாம்.

# சமூகப் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளையும் உளவளத்துணை நிறுவனங்கள் வழங்கவேண்டும்
## நூல் வெளியீட்டு நிகழ்வில் அரச அதிபர் வலியுறுத்து



உளவளத்துணைப் பணியில் ஈடுபடும் நிறுவனங்கள் வெறுமனே தகவல்களைச் சேகரிப்பதாக அமையாது சமூகப் பிரச்சினை களுக் குரிய தீர்வுகளை வழங்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ்.

நாவலர் கலாசார மண்டபத்தில் நடை பெற்ற 'உளவிருத்தி குறைபாட்டை விளங்கிக் கொள்ளல்' என்னும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டபோதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த நிகழ்வில் அரச அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

இந்த மாவட்டத்தில்பாதிக்கப்படும் பிள்ளைகள், மற்றும்அவர்களின் பெற்றோருக்குச் சாந்திகம் நிறுவனம் ஆற்றும் உளவளத் துணை தொடர்பான சேவைகள் பாராட்டப் படக் கூடியது. சுனாமியைத் தொடர்ந்து 2005 ஆம் ஆண்டிலே நான் இந்த மாவட்டத்திலே பதவியேற்ற போது பல சிறுசிறு நிறுவனங்கள் உளவளத்துணைப் பணியிலே ஈடுபட முன்வந்தன.

எனினும் அப்பணிகள் யாவும் ஒன்றிணைக்கப்பட்டு காத்திரமான சமூகப்பங்களிப்பை வழங்க வேண்டும் என்பதற்காக பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் தலைமையில் ஒருங்கிணைப்புக்குழு அமைக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது.

இங்கு இந்த நிறுவனங்களின் பணி வெறுமனே தகவல்களை சேகரிப்பதாக அமையாது சமூக பிரச்சனைகளுக்கு உரிய தீர்வுகளையும் வழங்க வேண்டும்.

நாங்கள் யாருக்குச் சேவை செய்கின்றோம் என்பதை புரிந்து கொண்டு அவர்களின் நலன்கள், தேவை களைப் புரிந்து கொண்டு செயற்படல் வேண்டும்

குடும்பச் சூழ்நிலைகள் காரணமாக வறுமை, பொருளாதார இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்து மனக்கஷ்டங்களுடன் வாழும் மக்களை ஆற்றுப்படுத்துகின்ற சேவை முன்னெடுக்கப்பட வேண்டும்.

சாந்திகம் நிறுவனம் உள, சமூகப் பிரச்சினைகள் தொடர்பான பல செயற்றிட்டங்களை செயற்படுத்துவது அனைவருக்கும் ஓர் உந்து சக்தியாக விளங்கும் - என்று அரச அதிபர் [illegible] (267-111-60)

இன்று மட்டும் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில்
கண்காட்சியும் சிறப்பு விற்பனையும்
Prince
"Better than the Best"
கண்காட்சியும் சிறப்பு விற்பனையும்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின்
Grace Hensman Memorial மண்டபத்தில்
செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி
காலை 9 மணிமுதல் 5 மணிவரை
Jewelers Designing | Painting
Cake Icing | Box Making
Flower Arrangement | Needle Work
Saree Work | Wedding Bouquet
Clay Work | Candle Making
அனுமதி இலவசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றரை வருடகாலமாக பின்வாங்கிச் செல்வது தந்திரோபாய நடவடிக்கை எனக் கூறலாமா?

## இராணுவத்தளபதி கேட்கிறார்

கொழும்பு,செப்.20

ஒன்றரை வருடங்களாக போரில் பின் வாங்கிச் சென்றுகொண்டு அதனைத் தந்திரோபாய நடவடிக்கை என்று கூறமுடியாது. விடுதலைப் புலிகளின் கடைசி நாள்கள் எண்ணப்படுகின்றன.

- இவ்வாறு இராணுவத்தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

'ரொய்ட்டர்ஸ்' செய்தி நிறுவனத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

விடுதலைப் புலிகள் அமைப்பிலுள்ள சுமார் 12,000 போராளிகளில் தற்போது 3,000 போராளிகளே மீதமாக உள்ளனர்.

இவர்களும் கடைசி ஆள்வரை நின்று சண்டையிடுவதைவிட எப்படியாவது தப்பியோடிவிடவேண்டும் என்ற நிலைப் பாட்டிலேயே உள்ளனர்.

அரச படைகள் கட்டம் கட்டமாக புலிகளை அழித்து முற்றுமுழுதான - நிறை வான நடவடிக்கையை - மேற்கொண்டு வருகின்றன. ஈராக் போல வேகமாகச் சென்று தீர்வு காணும் ஆதங்கத்தில் நடவடிக்கையை மேற்கொண்டு விட்டு, ஈற்றில் படையினரை பயங்கரவாதிகளின் தந்தி ரோபாய நடவடிக்கைகளுக்கு பலிகொடுக்க முடியாது.

தற்போது புலிகளின் கோட்டையான கிளிநொச்சியை எமது படைகள் நெருங்கி விட்டன. அங்கு நேரடி மோதல்கள் இடம் பெற்று வருகின்றன. புலிகள் அமைப்பில் கொல்லப்படுவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாக உள்ளது. இதே இழப்பு வீச்சில் அவர்களால் நெடுங்காலம் நின்று பிடிக்கமுடியாது.

தற்போது புலிகள் அமைப்பில் உள்ள 3,000 பேரும் கடைசி ஆள்வரை நின்று சமரிடப் போவதில்லை. அரச படையினரின் நடவடிக்கைக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஒரு கட்டத்தில் மக்களோடு கலந்து விடுவார்கள். அல்லது தற்போது கிழக்கில் ஆங்காங்கே முயற்சிகளை மேற்கொள்வது போன்று மாற்று உபாயத்தினை நாடுவர். ஆனால், புலிகளை எப்போது முற்றாக எமது படைகள் அழித்தொழிக்கும் என்ற காலக்கெடு எதனையும் வழங்க நான் விரும்பவில்லை - என்றார். (சி)

# இலக்கியப் பேரவையின் விருது பெறும் நூல்கள்

யாழ்ப்பாணம், செப்.20

இலங்கை இலக்கியப் பேரவை 2006, 2007 ஆம் ஆண்டின் விருதுபெறும் நூல்களின் விவரங்களை வெளியிட்டுள்ளது.

*ஆய்வு: 2006-மலாயக் குடிப் பெயர்வும் யாழ்ப்பாணச் சமூகமும் (பேராசியர் எஸ்.சத்தியசீலன்), 2007- தென்.கிழக்கு முஸ்லிம் தேசத்தாரின் நாட்டாரியல் (மருதூர் ஏ.மஜீத்),

*நாவல்: 2006-உதயக் கதிர்கள் (திக்கு வலைக் கமால்), மீண்டும் வருவேன் (செங்கை ஆழியான்)

*சிறுகதை: 2006-இளங்கோவின்கதைகள்(இளங்கோ), 2007-வரால் மீன்கள் (எம்.எஸ். அமானுல்லா)

*கவிதை: 2006-தகுதி நிலையில்எதுவும்கிடைக்க வில்லை, 2007-இரண்டு கார்த்திகைப் பறவைகள் (எஸ். புஸ்பானந்தன்)

*காவியம்: 2006- திரு.நபிகாவியம் (ஜின்னாஹ் ஷரிப்புத்தீன்), 2007- தகுதியான காவியம் எதுவும் கிடைக்க வில்லை

*நாடகம்: 2006-மண்ணின் மைந்தர்கள்(மு.அருள்பிரகாசம்), 2007-அரங்கப் படையல்கள்(சைவப் புலவர் சு.செல்லத்துரை)

*சிறுவர் இலக்கியம்: 2006-உதவும் உள்ளங்கள் (கவிஞர் மண்டூர். தேசிகன்), 2007- மரம்வெட்டியும் ஒரு தேவதையும் (ஓ.கே.குணநாதன்)

*சமயம்: 2006-இந்து ஆலயங்களில் மருத்துவ சுகாதாரம்(டாக்டர்.எஸ். சிவ சண்முகராசா), 2007-வெளிச்சத்தின் வேர்கள் (தமிழ்நேசன்)

*பல்துறை: 2006 தமிழர் மருத்துவம் அன்றும் அன்றும் (கலாநிதி.பால.சிவகடாச்சம்), 2007- பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை (கலாநி தி.செ.யோகராசா)

*மொழிபெயர்ப்பு: 2006-தகுதியான நூலெதுவும் கிடைக்கவில்லை, 2007- பிளேக் கவிதைகள் (வைரமுத்து சுந்தரேசன்). (202)

## நல்லூர் அரிமாக் கழகத்தின் இம்மாதத்துக்கான செயற்றிட்டம்

யாழ்ப்பாணம்,செப்.20

நல்லூர் அரிமாக்கழகத்தின் இந்த மாத செயற்றிட்டமாகச் செங்குந்தா இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவ, மாணவிகளுக்கு புதிய சப்பாத்து, பாடசாலை உபகரணங்கள் போன்றவற்றை வழங்கவிருக்கின்றது.

இந்த நிகழ்வு திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நாளை முற்பகல் 10 மணிக்கு கழகத் தலைவர் லயன் ஐ.ஏ.மகேஸ்வரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

கழகத்தின் செயற்றிட்டத்தை வலயத் தலைவர் பி.செந்தில்செல்வன் ஆரம்பித்து வைப்பார்.

இப்பகுதியிலுள்ள 80 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களைப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதுடன் அன்பளிப்புகளும் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (60)

## பெருமாள் கோயிலில் சனிவார உற்சவம்

யாழ்ப்பாணம், செப்.20

யாழ்.வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜ பெருமாள் ஆலயத்தின் புரட்டாதிச் சனிவார உற்சவம் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி முற்பகல் 11 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் காலை, மாலை கருட சேவை உற்சவங்களும் நடைபெறவுள்ளன.

இந்த ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழா இம்மாதம் 30 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகவிருக்கின்றது.

தேர்த்திருவிழா அடுத்த மாதம் 8 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து 9 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தீர்த்த திருவிழா நடைபெறும்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

திருமதி பு.சிவபாலன் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர் சு.கனகசபை**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் குழாம்,
யா/கைதடி நுணாவில் அ.த.க.பா.

(78611)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியை

திருமதி சி. கிரிதரன் அவர்களது அன்புத் தந்தை

**சி.கதிர்காமநாதன்**

அவர்கள் 19.09.2008 அன்று இறைபதம் அடைந்ததையிட்டு பெரும் துயர் அடைகின்றோம். அன்னாரின் இழப்பால்துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்து அனுதாபங்க ளைத்தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

சாந்தி!!!

(78608)

ஆசிரியர் கழகம், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.

## மரண அறிவித்தல்

### புண்ணியமூர்த்தி கண்ணபிரான்



கீரிமலை வீதி, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் 92, யாழ்.வீதி, வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட புண்ணியமூர்த்தி கண்ணபிரான் (ஓய்வுபெற்ற மின் பொறியியலாளர், இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்) அவர்கள் 18.09.2008 வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான புண்ணியமூர்த்தி - மாரிமுத்து தம்பதியினரின் அருமை மகனும் யாழ். கில்னர் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற சண்முகசுந்தரம் மற்றும் இராமாமிர்தம் தம்பதியினரின் மருமகனும் ஜெயந்தியின் ஆருயிர்க் கணவரும் செந்தூரன் (SOFTWARE ENGINEER-ASSET, COLOMBO), நிவேதினி (ஆசிரியை, வவு/பூவரசங்குளம் மத்திய மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜானகி, பாகீரதி (ஆசிரியர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை), கலைச்செல்வி (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சகோதரரும் இரகுநாதன் (ஓய்வுபெற்ற கட்டடத் திணைக்கள உத்தியோகத்தர்), காலஞ்சென்ற கணேசதுரை (ஓய்வுபெற்ற அதிபர்), வசந்தி (ஆசிரியை,யா/ வேம்படி மகளிர் கல்லூரி), சிறிதரன் (ஆசிரியர், செண்.சேவியர் கல்லூரி, மன்னார்), காலஞ்சென்ற ரவிதரன், காலஞ்சென்ற முரளீதரன், நாவலன் (அரச முகாமைத்துவ உதவியாளர், மாவட்ட சமுர்த்தி அலுவலகம், யாழ்ப்பாணம்), ஆனந்தி (ஆசிரியை, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி) ஆகியோரின் மைத்துனரும் குஞ்சிதபாதம் (கணக்காளர், E.S.P.), மஞ்சுளாதேவி, சிவகுமாரன் (ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி) ஆகியோரின் சகலனும் மதுராகணேசன் (Director E Touch Computer System, Jaffna) தீபன் (பொறியியலாளர், சிங்கப்பூர்), ஆதித்தன் (மாணவன், கொழும்பு), அபயன் (மாணவன், இந்தியா), கார்த்திகா (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகம்), விஷ்ணுகரன், தரங்கினி, ரவிவர்மன் ஆகியோரின் மாமனாரும் கௌதமன் (யாழ்.பல்கலைக்கழகம்), ராஜா தித்தன் (சவுதி), சாண்டில்யன் (மாணவன், யாழ்.இந்துக் கல்லூரி), வைஷ்ணவி (மாணவி, யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), சைலேஷ், உமையாள் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.09.2008) ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

க.செந்தூரன் (மகன்)
92,யாழ்.வீதி வவுனியா,
தொ.பே: 0244922406

தி.குஞ்சித பாதம் (சகலன்)
கில்னர்லேன், யாழ்ப்பாணம்,
தொ.பே:021 2229169

க.மதுராகணேசன் (மருமகன்) லக்ஸ்மிஸ்தான், உடுவில் வீதி, மருதனார்மடம். தொ.பே: 021 4590222, 0602211216

(78607)

## பரிசளிப்பு விழா,

யாழ்ப்பாணம்,செப்.20

ஆவரங்கால் நடராஜா இராமலிங்க வித்தியாலயபரிசளிப்புவிழாநாளை பி.ப.2மணிக்கு பாடசாலை அரங்கில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் அ.அருணந்திசிவம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில், வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் பிரதம விருந்தினராகவும், கோப்பாய் கோட்டக் கல் விப் பணிப்பாளர் சி.சித்திரவடிவேல், யாழ். மாவட்ட செயலக 'நிக்கொட்' பணிப்பாளர் என்.எஸ். ஆர்.சிவரூபன், அச்சுவேலி இலங்கை வங்கி முகாமையாளர் த.புவனேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்வர்.

## கமநல காப்புறுதிச்சபை அலுவலகம் இடமாற்றம்

யாழ்ப்பாணம்,செப்.20

கமத்தொழில் மற்றும் கமநல காப்புறுதிச் சபையின் யாழ்.மாவட்ட அலுவலகம் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலகக் கட்டடத்திற்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

இந்த அலுவலகம் இதுவரை காலமும் நல்லூர் கமநல சேவை நிலையத்தில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

## முன்சேவைப் பயிற்சிகள்

யாழ்ப்பாணம்,செப்.20

தென்மராட்சி கல்வி வயலப் பாடசாலைகளைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கான முன்சேவைப் பயிற்சிகள் இடம் பெறவுள்ளது.

இந்தப் பயிற்சிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடை பெறும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார் (207-60)

## யாழ்ப்பாணக் கல்லூரியில் ரெனிஸ் இறுதியாட்டம்

யாழ்ப்பாணக் கல்லூரி அலுவலர்கள் ரெனிஸ் கழகம் நடத்தும் லூதர் செல்வராசா ஞாபகார்த்த வருடாந்த ரெனிஸ் சுற் றுப் போட்டியின் இறுதிப்போட்டியும் பரிச ளிப்பு விழாவும் இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணக் கல்லூரியில் நடை பெறவுள் ளன.

[illegible] ந.எஸ்.பி. நாகரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (69)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி கதிர்காமநாதன்

**(ஓய்வுபெற்ற வெளிக்கள உத்தியோகத்தர்)**
**(Hauteville, Estate)**



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் மயிலணியை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கதிர்காமநாதன் (18.09.2008) வியாழக்கிழமை இறைவனடிசேர்ந்தார்.

அன்னார் இராசேஸ்வரியின் அன்புக் கணவரும் கருணாகரன் (கனடா), கிருபாகரன் (Hauteville, Estate) பிரபாகரன் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), சித்திரா (ஆசிரியை, மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் தந்தையும், மகேஸ்வரி, பரமேஸ்வரி, யோகநாதர் காலஞ்சென்ற மாணிக்க வாசகர் மற்றும் சண்முகநாதன் ஆகியோரின் சகோதரனும் தனபாலசிங்கம், குலசேகரம், துரைசிங்கம் காலஞ்சென்ற வன்னியசிங்கம் மற்றும் நாகராசா, தங்கரத்தினம், நல்லைநாயகி, செல்வலட்சுமி, யோகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் கிரிதரன் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்) கோமதி கருணாகரன், சர்மிளா கிருபாகரன் ஆகியோரின் மாமனாரும் விதுசன், பவன், கஜந்தன், கிஷாந்தன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.09.2008) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயிலணி, சுன்னாகம்.
தொ.பே: 0602210644

(78605)

தகவல்:
குடும்பத்தினர்

### நாகமுத்து கணபதிப்பிள்ளை

**(இளைப்பாறிய நில அளவை பிரதி நாயகம்)**

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து கணபதிப்பிள்ளை கடந்த (17.09.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வள்ளியம்மையின் அன்புக் கணவரும், கிரிஜா, யசோதா (கனடா), கிருபா(ஆசிரியர், வேம்படி உயர்தர மகளிர் கல்லூரி), ஜெயசீலன் (பகுதி ஆசிரியர், மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சோமசுந்தரம், நாகராஜா, ஜெனகேஸ்வரன், தர்சினி ஆகியோரின் மாமனாரும், நிரிஜா, சுஜீவா(வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகள்), நிதர்சினி, நிதன் ஆகியோரின் பேரனும், வல்லிபுரம், நடேசபிள்ளை, சங்கரப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் திருஞான சம்பந்தர், சின்னத்தம்பி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த (18.09.08) வியாழக்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

டச்சு வீதி,
சாவகச்சேரி.

(78609)

தகவல்:
நடேசபிள்ளை ஜெகதீசன்
(பெறாமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அதிகாரிகளின் சிறப்பான திட்டமிடலினால் தேசிய ரீதியில் சாதித்தார்கள் யாழ்ப்பாண வீரர்கள்

வடமாகாணப் பாடசாலைகள் மட்டத்தில் இடம்பெற்ற விளையாட்டுப் போட்டிகளில் யாழ்.மாவட்டத்தில் இருந்து சென்ற பாடசாலைகள் சிறப்பாகச் செயற்பட்டுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

போக்குவரத்துக் கஷ்டத்தின் மத்தியில் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற பாடசாலைகளின் வீரர்கள், வீராங்கனைகள் குழுநிலைப் போட்டிகளிலும் சரி, தனிநபர் போட்டிகளிலும் சரி வெற்றி பெற்றுத் தமது திறமைகளைச் சரியாக வெளிப்படுத்தி தாம் சார்ந்த பாடசாலைக்கும் தமது மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளார்கள்.

இந்த வீரர்கள், வீராங்கனைகளின் திறமைகளை மதித்துப் பலத்த கஷ்டத்தின் மத்தியிலும் வடமாகாண கல்வியமைச்சும் தேவையான ஏற்பாடுகளைச் செய்திருந்தமை மேலும் பாராட்டுக்குரியது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து மாகாண விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்ட வீரரர்களுக்குத் தேவையான உணவுகள், விளையாட்டுப்போட்டி நேரத்




தில் வேண்டிய சத்துணவுகளையும் முன்னர் ஒப்புக்கொண்டதைப் போன்று சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் இருந்து சென்ற ஒருசில பாட சாலைகளின் விளையாட்டு வீரர்கள் திருகோணமலையில் நடந்துகொண்ட முறை தொடர்பாகப் பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

முன்னர் போட்டி ஒத்திவைக்கப்பட்ட போது திருமலையில் பாடசாலை மாணவர்கள் தங்கவைக்கப்பட்டு இருந்தவேளையில், தங்கிய கட்டடத்தில் உள்ள நீர்க்குழாய்களை உடைத்தும் சொத்துக்களுக்குச் சேதங்களை உண்டாக்கியும் உள்ளதாகக் கூறப்பட்டது.

இந்த செயற்பாடுகளை யாழ்.மாவட்ட கல்வி வலயங்களின் உடற்கல்விப் பணிப்பாளர் உரிய ஆசிரியர்களிடம் கடுமையான முறையில் எடுத்துக்கூறியுள்ளார்.

இத்தகைய உடற்கல்வி அதிகாரிகள் பாராட்டப்படவேண்டியவர்கள். யாழ். மாவட்ட மாணவர்களை யாழ்.மாவட்டம் தவிர்ந்து ஏனைய இடங்களில் இடம் பெறும் போட்டிகளில் கலந்துகொள்ளச் செய்வதற்கு அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள்.

தென்னிலங்கையில் இடம்பெறும் தேசிய மட்டத்திலான போட்டிகளில் கலந்து கொள்வதற்கு வசதியாக மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகள் நிறைவுபெற்று இரண்டு, மூன்று வாரங்கள் நிறைவடைந்த நிலையிலும் வடமாகாண கல்வியமைச்சு யாழ். மாவட்ட மாணவர்களின் போக்குவரத்துக் கஷ்டங்களை உணர்ந்து அவர்களை வவுனியாவில் தங்கவைத்து உபசரித்தமை அனைவராலும் பாராட்டப்பட்டது.

வடமாகாண கல்வியமைச்சு தொடர்ந்து வீரர்களைத் தங்கவைத்துப் பராமரிப்பதில் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகிய போதிலும் தொடர்ந்து மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக அவை ஈடுசெய்யப்பட்டு விட்டதாக திருமலையில் இருந்து திரும்பிய ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

சமூக சேவைகள் அமைச்சு கல்வி அமைச்சுடன் தொடர்புகளை ஏற்படுத்தி யாழ்.மாவட்டத்தில் இருந்து சென்று வவுனியாவில் தங்கியுள்ள பாடசாலைகளின் ஆசிரியர்களைக் கொழும்புக்கு அழைத்துக் கலந்துரையாடியதைத் தொடர்ந்து தீர்வுகள் எட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த நடவடிக்கை மூலம் தேசிய மட்டப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள வீரர்களுக்குக் கடந்த காலங்களில் இருந்த போக்குவரத்து நெருக்கடிகள் குறைக்கப்பட்டுள்ளன. கடந்த காலங்களைப் போன்று கப்பலில் பயணம் செய்து வாந்தி எடுத்த களைப்பு, பயண அலுப்பு, உணவு உண்ண முடியாத நிலையில் போட்டியில் பங்குபற்றி வெறும் கையுடன் திரும்பும் நிலையில் இருந்து சற்று ஆறுதலும் ஓய்வும் கிடைத்துள்ளன.

இதனை நல்லமுறையில் பயன்படுத்தி தேசிய மட்டத்தில் முத்திரை பதிக்க வீரர்கள் முயற்சித்திருந்தார்கள். அதன்விளைவாக ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி உடற்பயிற்சி அணி உடற்பயிற்சிப் போட்டியில் தேசிய ரீதியில் முதலிடத்தைக் கைப்பற்றி யாழ்.மாவட்டத்தின் புகழை மீண்டும் ஒரு முறை உச்சிக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள்.

தற்போது பாடசாலைகளின் விளையாட்டுத் துறையில் மாற்றம் ஒன்றை வட

**வின்னன்**

மாகாண கல்வி அமைச்சு அதிகாரிகளும் யாழ்.மாவட்ட கல்வி அதிகாரிகளும், உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர்களும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள்.

இதனை நல்லமுறையில் பயன்படுத்தி தேசிய மட்டத்தில் இனிமேல் இடம்பெறவுள்ள விளையாட்டுப் போட்டிகளில் முத்திரை பதிக்கவேண்டிய பொறுப்பும் கடமையும் யாழ்.மாவட்டத்தில் இருந்து சென்றுள்ள வீரர்களுக்கு உண்டு என்பதை அவர்கள் மறந்துவிடமாட்டார்கள்.

# எரிபொருள் விலையைக் குறைக்க அரசை வலியுறுத்திப் போராட்டம்

கொழும்பு,செப்.20

எரிபொருள்களின் விலைகள் உலக சந்தையில் தொடர்ந்தும் குறைந்து வருகின்ற நிலையில் அவற்றின் விலைகளை இனியாவது இலங்கையில் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் மக்களின் நலன் கருதி அரசுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருள்களின் விலைகள் தொடர்ந்தும் குறைந்துகொண்டு வருகின்றன. ஆனால், இலங்கையில் மாத்திரம் அவற்றின் விலைகள் குறைக்கப்படவில்லை.

தற்போது உலக சந்தையில் மசகு எண்ணெய் ஒரு பரலின் விலை 87 அமெரிக்க டொலராகக் குறைந்துள்ளது.

ஆனால், இப்போது 154 ரூபாவுக்கு அரசு பெற்றோலை விற்கிறது. இது பெரும் அநீதியாகும்.

மக்களின் வயிற்றில் அடித்து இப்படி இலாபம் பெற்றதுபோதும். இனியாவது விலையைக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் இதற்கு எதிராக நாம் கடும் நடவடிக்கை எடுப்போம் என்றும் எச்சரித்துள்ளது. (சி)

# புத்தாக்கக் கண்காட்சியில் வெற்றிபெற்ற ஆக்கங்களும் கண்டுபிடிப்பாளர்களும்

நல்லூர்,செப்.20

இலங்கை தேசிய புத்தாக்குநர் ஆணையமும் கல்வி அமைச்சும் இணைந்து யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்திய புத்தாக்கக் கண்காட்சியில் வெற்றி பெற்றவர்களும் அவர்களது கண்டுபிடிப்புகளும் வெளியிடப்பட்டுள்ளன.

விவரம் வருமாறு:

**கனிஷ்ட பிரிவு**

*தங்கப்பதக்கம்:* வி.விபூஷணன் (தண்ணீரில் நனைந்தும் எரியக்கூடிய நெருப்புப் பெட்டி) - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் வித்தியாலயம்.

*வெள்ளிப்பதக்கம்:* எஸ்.சுகன்யா (கீழே விழுந்தாலும் எழுதக்கூடிய போல் பொயின்ட்) - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

*வெண்கலப்பதக்கம்:* பி.அகிலேஸ்வரன் (பேனையாகவும் ரெஸ்ரராகவும் பயன்படுத்தக்கூடிய பேனை) - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.

*விசேட தகைமைகள்:* ஜே.வோல்ட் ஜெயபிரசாத் (குடையில் டிஷ் அன்ரனா) - சென்.ஜோன்ஸ் கல்லூரி, பி.தேனுஜன் (இலகுவில் உரித்து ஒட்டக்கூடிய முத்திரை) - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, ஏ. ஜெயஈஸ்வரன் (நெருப்பில் பொலித்தீனைச் சீர்செய்யும் உபகரணம்) - ஹாட்லிக் கல்லூரி, கே.தாரகா (றெஜிபோமை வெட்டும் உபகரணம்) - வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, எஸ்.சாருஜன் (இரவில் பயன்படுத்தக்கூடிய மூக்குக் கண்ணாடி) - வேலணை மத்திய கல்லூரி,

எஸ்.திவாகரன் (தனியொருவரால் தூரம் அளக்கக்கூடிய உபகரணம்) - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, ஜே.ஜெயகீதன் (மின்னலில் இருந்து பாதுகாக்கக்கூடிய அன்ரனா) - சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எஸ்.சுகன்ஜா (இரவில் திறந்தாலும் குச்சி விழாமல் இருக்கும் தீப்பெட்டி) - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, பி.ரேணுகாந் (அதிரும் பேனை) - சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

**சிரேஷ்ட பிரிவு**

*தங்கப்பதக்கம்:* ஜே.சிவலோசனன் - கா.சிகானுசன் (பல வழிகளிலும் உதவும் குடை) - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

*வெள்ளிப்பதக்கம்:* எம்.அன்ரன்ராஜ் பி.ஏ.செரோன் (மின்சாரத்தில் இயங்கும் தூண்டில்) - சென்.பற்றிக்ஸ்.

*வெண்கலப்பதக்கம்:* வி.சுஜீபன் (மண்ணெண்ணெய் விளக்கைக் குறிப்பிட்ட நேரத்தின் பின் அணைக்கும் கருவி) - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி).

*விசேட தகைமைகள்:* எஸ்.கோகுலன் (சுழலும் மா அரைக்கும் இயந்திரம்) - மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், எஸ்.நிரோஜன் (பற்றறி இல்லாத மின்சூழ் விளக்கு) - பருத்தித்துறை இமையாணன் பாடசாலை, எஸ்.நிரோஜன் (தானியங்கிச் சுழலும் சூரியகலம்) - இணுவில் மத்திய கல்லூரி, எஸ்.மோகனகிருஷ்ணா (மண்ணின் ஈரலிப்பை அளக்கும் கருவி) - யாழ். இந்துக் கல்லூரி, எஸ்.சிவலேனுஜா (மின் தூண்டலும் ஒளிர்வும்) - விக்ரோறியாக் கல்லூரி, எஸ்.தெய்வீகன் (வட்டமாக அதிரும் பென்) - தேவரையாளி இந்துக் கல்லூரி.

**பாடசாலை ஆசிரியர்களுக்கானது**

*தங்கப்பதக்கம்:* என்.செல்வச்சந்திரன் (தானியங்கி முறையில் தண்ணீர்ப் பம்பியைக் கட்டுப்படுத்தல்) - கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி.

*வெள்ளிப்பதக்கம்:* ஜி.அன்ரன் பிரேமதாஸ் (சூரியவெளிச்சத்தில் இருந்து எறிகருவி Projector) - உரும்பிராய் சந்திரோதயா வித்தியாலயம்.

*வெண்கலப்பதக்கம்:* பி.தியாகலிங்கம் (பௌதிகத்துறையில் பிளமிங்கின் விதியைச் செய்து காட்டக்கூடிய உபகரணம்) - பாஷையூர் சென்.அன்ரனிஸ் கல்லூரி.

*விசேட தகைமைகள்:* எஸ்.கிருஷ்ணானந்தன் (பாதுக்காப்பாக எலிபிடிக்கும் உபகரணம்) - யாழ்.மத்திய கல்லூரி, திருமதி ஆர்.ஜே.மரியநாயகம் (இயற்கைக் குளிராக்கி) - வேம்படி மகளிர் கல்லூரி, கே.கோவிந்தராஜா (அபூர்வமூட்டும் கற்பித்தல் உபகரணங்கள்) - கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்.

**திறந்த போட்டி**

*தங்கப்பதக்கம்:* கலாநிதி என்.சிவயோகன் - பௌதிகவியல்துறைத் தலைவர், யாழ்.பல்கலைக்கழகம் (வெளியில் இருந்து கொண்டு கதவினில் சட்டம் (தாழ்பாள்) போடும் பொறிமுறை).

*வெள்ளிப்பதக்கம்:* எஸ்.ஹரிகரன் (சிலைட் புற ஜெக்டர்) - யூனியன் கல்லூரி.

*வெண்கலப்பதக்கம்:* கே.விமலர்ாஜா (மரவள்ளிக்கிழங்கில் இருந்து சவ்வரிசி செய்யும் முறை) - நெல்லியடி ஒட்டுத் தொழிற்சாலை.

*விசேட தகைமைகள்:* ஜி.கபூரன், கே.துயந்தன் (காற்றலையில் இருந்து மின்சாரம்) - வேலணை மத்திய கல்லூரி, எஸ்.பிரதாபன் (மின்சாரத்தில் மரக்கறி வெட்டும் இயந்திரம்) - யாழ்.மத்திய கல்லூரி, கே.நிரோஜன் (மூலைகளை அளவிடக்கூடிய அளவீட்டு நாடா) - இணுவில் மத்திய கல்லூரி. (202-111)

# 'ஐய்யோ' என்று சத்தமிட்டுப் பேசும் மீன் மீனவரின் வலையில் மாட்டிக்கொண்டது

சேலம்,செப்.20

வலையில் சிக்கியவுடன் 'ஐய்யோ' என்று சத்தமிடும் அரியவகையான பேசும் மீன் ஒன்று கடந்த புதன்கிழமை மேட்டூர் அணையில் பிடிப்பட்டது. மீனைக் கண்ட மீனவர்களும், சுற்றுலாப் பயணிகளும் வியப்படைந்தனர்.

மேட்டூர் அணை பாலாறு நீர்ப்பிடிப்பு பகுதியில், கடந்த புதன்கிழமை அதிகாலை மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, ஒருவரின் வலையில், நான்கு கிலோ எடைகொண்ட இந்தப் பேசும் மீன் சிக்கியது.

பேசும் மீன் குறித்து மீனவர்கள் கூறியதாவது:

இதை ஆங்கிலத்தில், 'மஷர்பிஷ்' என்று கூறுவர். இவ்வகை மீன்கள், அதிகபட்சம் 50 கிலோ எடைகொண்டதாக இருக்கும். நீர்த்தேக்கங்களில், ஆழமான பகுதியில் வசிக்கும் இந்த மீன், பலத்த ஒலி எழுப்பும். இந்த ஒலி, குழந்தைகள் மழலைக் குர



லில் பேசுவது போல இருக்கும். வலையில் சிக்கிவிட்டால், 'ஐய்யோ' என்று சத்தமிடும்.

கர்நாடகா மாநிலம் அம்பாபுரம் என்ற இடத்தில் கோவில் ஒன்றுக்கருகிலுள்ள நீர்நிலையில் இந்த வகை மீன்கள் அதிகம் உள்ளன. அங்கு வசிக்கும் மக்கள், இந்த மீன்களைத் தெய்வமாகக் கருதி வழிபடுகின்றனர். எனவே, இது வலையில் சிக்கினாலும், பிடிக்காமல்விட்டு விடுவர். இந்த மீனைப் பிடிக்க கர்நாடக அரசு தடைவிதித்து[illegible]றது - என்றனர்.

## யாழ்.கலாசாரப் பேரவையின் கலை இலக்கிய விழாவில்

# மாணவர்களின் சிந்துநடை, வடமோடி நாட்டுக்கூத்துகள் முக்கிய இடம்பெறும்

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவை நடத்தும் கலை இலக்கிய விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் மாணவர்களின் சிந்து நடை மற்றும் வடமோடிக் கூத்துகள் முக்கிய இடம்பெறும் என்று தெரிகின்றது.

யாழ்.அரசாங்க அதிபரும் மாவட்ட கலாசார பேரவைத் தலைவருமான கே.கணேஷ் தலைமையில் நடைபெறும் இந்த விழாவில், வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் பிரதம விருந்தினராகவும் யாழ்.பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர பேராசிரியர் [illegible], கலாபூஷணம் நவாலி [illegible]செல்லத்துரை ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

கலாபூஷணம் கே.ஆர்.சுந்தரமூர்த்தி குழுவினரின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும் இந்த விழாவில், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், யாழ்.மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், மௌலவி முகம்மது ஸரீப் முகம்மது மன்சூர் ஆகியோர் ஆசியுரையை நிகழ்த்துவார்கள்.

யாழ்.கரம்பொன் சிறிய புஸ்ப மகளிர் வித்தியாலயம், யா/வடமத்திய மகளிர் கல்லூரி மாணவர்களின் சிந்துநடைக் கூத்தும், கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை மாணவர்களின் வடமோடி நாட்டுக்கூத்து உட்பட கலை நிகழ்வுகளும் பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (111-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

முதலாம் ஆண்டு 280 ஆம் நாள்





**அமரர் சுப்பிரமணியம் இதயராஜ்**

மலர்வு: 1981.11.09
உதிர்வு: 2007.09.03

**அமரர் சுப்பிரமணியம் கௌசிகன்**

மலர்வு: 1979.08.27
உதிர்வு: 2007.12.15

*மனத்தினால் மறக்கொணாத மதிப்புயர் மாண்பின் செல்வங்களே!*
*இனத்தினோர், இணைந்தோர் ஏத்தும் எம் இனிய மக்கட் செல்வங்களே..!*
*நினைத்த எங்கள் நிலையென் செல்வம் நினைவுற நிறுத்தும் அண்ணாவே!*
*செல்வச்செழிப்புடன் வாழ்ந்த உங்கள் உயிரை மாய்த்ததோ தீய சக்திகளின்*
*துப்பாக்கி கனத்துமிங்களவும் விட்டுகடந்துமோ ராண்டோ ஐயனே!*
*ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மைவிட்டகலாது.*

68/2, இலந்தைக்குளம் வீதி, அரியாலை. குடும்பத்தினர்.

**VINS PHONE SHOP AND REPAIRS**
205/1, Kasthuriyar Road, Jaffna
G.S.M மேசைத் தொலைபேசிகள், கையடக்கத் தொலைபேசிகள்/ உதிரிப்பாகங்கள்,
Kit காட், More காட், Sim காட் என்பவற்றை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
HAND PHONE UNLOCK, SOFT WEAR செய்துதரப்படும், அத்துடன் சிறந்த முறையில் உடனுக்குடன் திருத்திக் கொடுக்கப்படும்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்:
23.04.1925

மறைவு:
21.08.2008

**அமரர் பெரியதம்பி பொன்னையா**

21.08.2008 இல் அமரத்துவம் அடைந்த எம் அன்புத் தந்தையின் மரணச் சடங்கில் கலந்துகொண்டு பல்வேறு வழி.களில் உதவிய நல்லுள்ளங்களுக்கும் தொலைபேசி, கடிதம் மூலம் அனுதாபம் தெரிவித்த உறவுகளுக்கும் மலர்வளையம் மூலம் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (20.09.2008) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிளசிங் மென்சன் எல்லை ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.
தொ.பே: 021 222 9863

குடும்பத்தினர்.

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
ரோயல் குளுக்கோஸ்
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
PACKED BY:
ROYAL Industries Colombo 12
☎: 0112334603

Composition Dextrose Monohydrate 100%
Royal Wellcome
ROYAL Pure Glucose
ஏக விநியோகஸ்தர்கள்:-
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## நிவாரணக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், செப்.20

தென்மராட்சி பிரதேசத்தில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மேலும் மூன்று பேருக்கு தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இக் கொடுப்பனவு எதிர்வரும் 23 ஆம் திகதி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் வழங்கப்படும்.

பின்வரும் பாதிக்கப்பட்டோர் தமது தேசிய அடையாள அட்டை, குடும்ப பங்கீட்டு அட்டை ஆகியவற்றுடன் வருகை தருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கந்தசாமி மனோன்மணி (ஐயனார் கோவிலடி, கொடிகாமம்), சின்னையா தங்கம்மா (சரசாலை மத்தி), தம்பித்துரை சிரோன்மணி (மட்டுவில் தெற்கு).

(202– 2007)

## கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.20

சாவகச்சேரி மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

(202–207)

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0212228250, 0777222422
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்
Diploma in Hardware Engineering
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=
Diploma in Video Editing
முன்னணி Video Mixing Software களுடன்
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=
Diploma in Graphic Designing
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=
பிரபல கணனிக்கணக்கியல் மென்பொருள்........
Tally செய்முறைப்பயிற்சிகளுடன் கம்பனிகணக்குகளையும் உள்ளடக்கி..
வகுப்புக்கள் ஆரம்பம் :22/09/2008 09.00AM

**STUDY IN UKRAINE (EAST EUROPE)**
MBBS/MD With O/L'S - 7years
With A/L' - 6years
LUGANSK STATE MEDICAL UNIVERSITY
Recognized By Sri Lankan Mdical Council
100% VISA SUCCESS
எமது நிறுவனத்தின் மூலம் கடந்தமாதம் அனுப்பப்பட்ட மாணவர்கள் அனைவரும் எதுவித சிரமமுமின்றி VISA வை பெற்றதுடன் தற்போது UKRAINEஇல் தமது கல்வியை தொடர்கின்றனர். (Royal College Colombo, Hindu College Colombo, St.Patricks College Jaffna, St.John's College Jaffna St.Michael's College Batticaloa, Holy Family Convent Jaffna, Hindu Ladies College, Ramanathan Hindu Ladies School Adventist International College Vavuniya, Vavuniya Maha Vidyalayam. ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவர்கள்.
SPONSOR/ BANK BALANCE தேவையில்லை
UKRAINE ஆனது கிழக்கு ஐரோப்பிய நாடென்பதால் UKRAINE STUDENT VISA உடையமாணவர்கள் ஐரோப்பாவில் உள்ள அண்டைநாடுகளாகிய Poland, Romania, Austria , Italy, France, Spain, Germany.U.K. ஆகிய நாடுகளுக்கு மருத்துவ கல்வி மற்றும் பயிற்சி நிமித்தம் சென்றுவருவதற்கான அரியவாய்ப்புண்டு.
Call: 0777 - 818/ (011) 4512591
scholinfo@yahoo.com
SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza, 30 Galle Road, Colombo.03

**ஸ்ரீ லங்கா இன்சூரன்சின் மாபெரும் வேலை வாய்ப்புத் திட்டம்**

உங்களை இலட்சாதிபதியாக்கக்கூடிய ஒரு தொழில் வாய்ப்பு..

50 பில்லியன் ரூபாவை விட அதிக சொத்துக்களை நிர்வகிக்கும் ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ் இலங்கையின் மிகப் பழமை வாய்ந்த விசாலமான மற்றும் மிகுந்த வலிமையான காப்புறுதி நிறுவனமாகும். உலகப் புகழ் பெற்ற தரப்படுத்தும் நிறுவனமான பிட்ச் ரேட்டிங்ஸ் லண்டன் நிறுவனத்திடம் இருந்து நிதியியல் வலிமை வாய்ந்த தேசிய காப்புறுதி நிறுவனம் AA (Lka) என்றும் தேசிய நீண்டகால கடனுக்கான A+ (Lka) என்னும் தரப்படுத்தல்களை வென்ற முதல் காப்புறுதி நிறுவனமாகும். அத்துடன் யாழ்.மாவட்டத்தில் 40 வருடகால சேவையினை மக்களுக்கு வழங்கி வருகின்றது.

மேற்படி எமது நிறுவனமானது யாழ்.மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆயுள் காப்புறுதி பிரிவிற்கு துடிப்பு மிக்க இளைஞர், யுவதி களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்களை கோருகின்றது.



**பதவி 01 (வெற்றிடங்கள் 10)**
விற்பனை அதிகாரி – ஆயுள் (Sales Executive Life)
மேற்படி பதவிக்கான தகைமைகள்
01. க.பொ.த. உயர்தரத்தில் 03 பாடங்களில் சித்தி
02. காப்புறுதித் துறையில் குறைந்தது 01 வருடம் பணியாற்றிய அனுபவம்
03. வயதெல்லை 18–30 வரை
04. இலங்கை காப்புறுதி நிறுவகத்தினால் நடத்தப்படும் பரீட்சையில் (IBSL Exam) சித்தி பெறுபவர்களுக்கு முன்னுரிமை

மேற்படி பதவிக்கான அனுகூலங்கள்
⇨ அடிப்படைச் சம்பளம் ⇨ தொலைபேசி வசதி
⇨ ஊழியர் சேமலாப நிதி, நம்பிக்கை நிதி (EPF, ETF)
⇨ மோட்டார் வாகன வசதி ⇨ வருடப் பங்குலாபம்

**பதவி 02 (காப்புறுதி ஆலோசகர்)**
மேற்படி பதவிக்கான தகைமைகள்....
01. க.பொ.த. சாதாரண தரத்தில் 06 பாடங்கள் சித்தி
02. வயதெல்லை 18–55 வரை
03. அரச மற்றும் தனியார் துறையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்
04. 2008 இல் க.பொ.த. உயர்தரப் பரீட்சையினை நிறைவு செய்தவர்களும் மேற்படி பதவி 02 இற்கு விண்ணப்பிக்கலாம்.

மேற்படி பதவிக்கான அனுகூலங்கள்
⇨ எல்லையற்ற, நிரந்தர வருமானம் ⇨ மோட்டார் வாகன வசதி
⇨ வருடாந்த பங்கு லாபம் ⇨ மேலதிக படிகள்

**மேற்படி பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி 01.10.2008**
விண்ணப்ப மேலுறையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை குறிப்பிடவும்.
விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய முகவரி
Sales Manager - Life
Srilanka Insurance
No.12, 1st Floor, Weerasingham Hall, Jaffna

Sri Lanka Insurance BUSINESS CLUB Insurance
SRI LANKA LIFE • Invest wisely in life
Sri Lanka Insurance FORMULA PLUS Motor Insurance


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



....ஸ்ரீகுமரன் எழுதிய 'செல்லையா தாத்தாவும் செல்லக் குழந்தைகளும்' நூலின் அறிமுக விழா அண்மையில் வலிகாமம் தெற்குப் பிரதேச சபை பொதுநூலகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்.கல்வியியற் கல்லூரி விரிவுரையாளரும் வாழ்வகத் தலைவருமான ஆ. ரவீந்திரன், எழுத்தாளர் ந.சத்தியபாலன் ஆகியோர் உரை நிகழ்த்துவதையும் நூலின் முதல் பிரதியை யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜாவி டம் இருந்து வர்த்தகர் சண்முகவேல் பெற்றுக்கொள்வதையும் நூலாசிரியர் அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் கர்ப்பிணித் தாய்மாரின் பிரச்சினைகள்



தமது சொந்த இடத்தைவிட்டு பிரச்சினைகள் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரிநிலையங்களில் வாழும் கர்ப்பிணித்தாய்மார்கள் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். தனது பிள்ளையை ஒழுங்கான சூழலில் பெற்றெடுக்கவேண்டும் என்று பல்வேறு கனவுகளோடு வாழும் இந்தக் கர்ப்பிணித் தாய்மார்களின் எதிர்பார்ப்புகள், தேவைகள் என்பது தொடர்பாக மட்டக்களப்பு குருக்கள்மடம் நலன்புரி நிலையத்தில் வாழும் சிலரிடம் வினவியபோது அவர்களிடம் இருந்து கிடைத்த பதில்கள்.

நபர் 1: கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போஷாக்கான உணவுதான் தேவை. இங்குள்ள பாலூட்டும் தாய்மார்களுக்கு மாப்பெட்டி கூட வழங்கவில்லை. கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மட்டும்தான் வழங்கியுள்ளனர்.

நபர் 2: அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் பழங்களைப் பெறுவதில் கஷ்டநிலை காணப்படுகிறது. மருந்தெடுப்பதற்கோ கிளினிக் செல்வதற்கோ தூர இடங்களுக்கு செல்ல வேண்டியுள்ளது.

கொட்டில்களில் வாழ்கின்றனர். இங்கு வெப்பம் அதிகமாகவுள்ளது. சாதாரணமானவர்களுக்கே கஷ்டமாக இருக்கும்பேரது கர்ப்பிணித் தாய்மார்கள் மிகவும் கஷ்டப்படுவார்கள்.

நபர் 3: காற்றோட்டமான வீட்டில் சந்தோஷமாக வசிக்கவும் போஷாக்காண உணவ உண்ணவுமே அவர்கள் விரும்புவார்கள். அவ்வாறு இருந்தால்தான் சந்தோஷமாக குழந்தையினைப் பெற்றெடுக்கக் கூடியதாக இருக்கும்.

நபர் 4: சனிக்கிழமைகளில் இங்கு வந்து கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மருந்துப் பொருள்களை வழங்குகிறார்கள். சத்துள்ள உணவுப் பொருள்களோ மாப்பெட்டியோ தருவதில்லை.

எங்கள் ஊராக இருந்தால் பழவகைகளை வாங்கி உண்ணலாம். இங்கு அவற்றை வாங்குவதற்கான பணவசதி எம்மிடமில்லை.

நன்றி: மீண்டும் வாழ்வோம் (Inter News)

## மக்கள் முகம்




சுழிபுரம் சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்தியராகக் கடமையாற்றிய செ.பரமசிவம்பிள்ளை தனது பதவியிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

இலங்கை சித்த ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியின் மாணவரான இவர் 1986ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரை கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் கடமையாற்றினார். தொடர்ந்து 2000ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த மாதம் 19ஆம் திகதி வரை சுழிபுரம் இலவச சித்த ஆயுள்வேத வைத்தியசாலையில் கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ளார்.

மயிலியப்புலம் கந்தசுவாமி ஆலயத் தேர்த் திருப்பணிச் சபைத் தலைவராகப் பணியாற்றி சித்திரத்தேர் வெள்ளோட்டத்தை நடத்தி முடித்தார். அரசசேவை சித்த வைத்திய சங்கத் தலைவராக 5 வருடங்கள் கடமையாற்றியவர்.

★ ★ ★

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் உபபீடாதிபதி இ.சத்தியேந்திரம்பிள்ளை பேரனர்த்த முகாமைத்துவக் கல்வி தொடர்பாக சர்வதேசப் பயிற்சியைப் பூர்த்திசெய்துள்ளார்.



கல்வி அமைச்சின் புலமைப் பரிசில் திட்டத்தின்கீழ் புதுடில்லியில் உள்ள தேசிய பேரனர்த்த இடர் முகாமைத்துவ நிறுவகத்தில், தெற்காசிய கல்வி நிறுவகத்தில் மேற்படி பயிற்சிநெறி நடத்தப்பட்டது. இப்பயிற்சிநெறியில் கலந்துகொண்டே இவர் பூர்த்திசெய்துள்ளார். தற்போது இவர் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் என்பவற்றின் சிரேஷ்ட வளவாளராகக் கடமையாற்றி வருகின்றார்.

★ ★ ★

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் புதிய இயக்குநராக க. கதிரமலை நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இந்நிறுவனத்தில் கணக்கியற்றுறைத் தலைவராக இதுவரை பணிபுரிந்தார்.

## புத்தக சாலை

### மொழி



வேலணை மத்திய கல்லூரியின் 10B மாணவர்களின் முயற்சியின் பேறாக வந்திருக்கிறது 'மொழி' எனும் மாணவர் சஞ்சிகை.

தி.செல்வமனோகரன் என்ற ஆசிரியரின் நெறிப்படுத்தலில் முற்றுமுழுதாக மாணவர்களின் ஆக்கங்களுக்கே முதன்மை கொடுத்து, அழகியல் சார்ந்த வடிவமைப்போடு 'மொழி' சஞ்சிகை வெளிவந்துள்ளது.

கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள், பாடசாலை வரலாறு எனப் பலதரப்பட்ட விடயங்களை இச்சஞ்சிகையில் காணமுடிகின்றது.

பாடசாலைச் சஞ்சிகை எனும்போது, ஒட்டுமொத்தப் பாடசாலையினதும் ஆளணி, பொருளாதார வசதிகளை உள்வாங்கியே வெளிவருவது வழமை. அந்தச் சம்பிரதாயங்களைத் தகர்த்தெறிந்து கொண்டு, 10B என்ற ஒரு வகுப்பினர் மாத்திரம் தனித்து நின்று தம் உழைப்பினூடாக 'மொழி' என்ற சஞ்சிகையைப் பிரசவித்துள்ளார்கள். 'மொழி' சஞ்சிகை எதிர்காலத் தலைமுறையினர் பற்றிய நம்பிக்கை ஒளியினைப் பிரகாசமாக்கியுள்ளது.

### சுன்னாகத்தில் தமிழ் எழுத்து இலக்கிய முன்னோடிகள்



கவிஞர் துரையர் என அறியப்படும் கலாபூஷணம் சு.துரைசிங்கம் ஆக்கி வெளியிட்டுள்ள நூல் 'சுன்னாகத்தில் தமிழ் எழுத்து இலக்கிய முன்னோடிகள்'.

சுன்னாகம் வாழ் ஆக்க இலக்கிய கர்த்தாக்களின் எழுத்துப் பணியை ஆவணப்படுத்தும் பெருமுயற்சியாக இந்நூல் அமைந்துள்ளது.

சுன்னாகம் மயிலணி சைவமகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் ஸ்தாபகர் நினைவுப் பேருரையாக நிகழ்த்திய தொகுப்பை நூல் வடிவில் வெளியிட்டுள்ளார்.

### ஓர் எழுதுவினைஞனின் டயறி



த.ஆனந்தமயிலின் பன்னிரண்டு சிறுகதைகளைத் தாங்கிக்கொண்டு 'ஓர் எழுதுவினைஞனின் டயறி' என்ற சிறுகதைத் தொகுதி வெளிவந்துள்ளது. இத்தொகுதி எழுத்து இலக்கிய வரலாற்றில் கடல்சார் படைப்புகளை மிக யதார்த்தமாக வெளிக்கொணர்ந்தவர்களின் முதன்மையானவராக ஆனந்தமயிலை அடையாளப்படுத்துகின்றது.

"ஆனந்தமயிலினுடைய படைப்புகளைப் படிக்கின்றபோது- கடல்பற்றிய வர்ணனைகளின்போது - நீர் கசிவது போல உணரமுடிகின்றது. அவருடைய படைப்புகளில் நீர்ச் சொற்கள் - நீர் சுமந்த சொற்கள் - நிரம்பி வழிகின்றன" என்று ஆனந்தமயிலின் படைப்புகள் பற்றி யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளர் பா.அகிலன் கூறியது மிகச் சரியான மதிப்பீடே.

இவ்வகையில் நீர்ச்சொற்களை நீர்த்துப் போகவிடாது ஒன்று திரட்டியதன்மூலம், ஆனந்தமயிலை ஈழத்தின் மிகச்சிறந்த சிறுகதைப் படைப்பாளியாக இனங்காட்டிய அவரது மகன் நித்திலவர்ணன் பாராட்டுக்குரியவராகின்றார்.

### புதியவர்கள்



சிறுகதையின் பன்முகத் தன்மைகளும் கைவரப்பெற்ற க.சட்டநாதனின் புதிய சிறுகதைத் தொகுதி 'புதியவர்கள்'. பொன்னி வெளியீடாகத் தொகுக்கப்பட்ட இந்நூல் பதின்மூன்று சிறுகதைகளைத் தன்னுள் கொண்டுள்ளது. மென்மையான அணுகுதலின் மூலம் வாழ்வின் இருண்மையான பக்கங்களைப் புரட்டிப் பார்க்கின்ற க.சட்டநாதனின் நோக்கு இச்சிறுகதைகளில் தெளிவாகத் தொனிக்கிறது.

கூடவே மனித வாழ்வுக்கான இருப்பும், அடையாளமும், போராட்டமும் இவர் கதைகளில் பயணம் செய்கின்றன.

தமிழ்க் கதையாடல் உலகில் க.சட்டநாதன் கொண்டுள்ள மொழி அக்கறையையும் கலைப் பிரக்ஞையையும் 'புதியவர்கள்' சிறுகதைத் தொகுதி தொடர்ந்தும் சுட்டி நிற்கின்றது. எனினும் இவரது முந்தைய தொகுதிகளான 'மாற்றம்', 'உலா', 'சட்டநாதன் கதைகள்' என்பவற்றில் காணப்பட்ட அதே கதை பின்னும் பாணியையே - எவ்வித மாற்றமுமின்றி - க.சட்டநாதன் தொடர்ந்து வருகின்றமை கொஞ்சம் உறுத்தலான விடயந்தான். எனினும் கரு, மொழி வெளிப்படுதிறன், அழகியற் கோலமாயமைந்த பின்னற் தொடர்ச்சி என்பன மூலம் 'புதியவர்கள்' தொகுதி கவனத்தை ஈர்க்கின்றது.

### வரலாறு - தரம் 11



2008ஆம் ஆண்டின் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக வரலாறு பாடத்தில் வினாவிடைகளைத் தயாரித்துத் தொகுத்து வழங்கியுள்ளார் வடமராட்சி குடத்தனை கரையூர்அ.மி.த.க. பாடசாலை ஆசிரியர் எஸ்.எம்.கண்ணகுமார்.

600இற்கும் மேற்பட்ட வினாக்களும் அவற்றுக்கான விடைகள் விளக்கங்களும் இந்நூலில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் கற்பித்தலையும் மாணவர்களின் கற்றலையும் இலகுபடுத்துவதாக இந்நூல் அமைந்துள்ளது.

### தமிழ்ச்செல்வம்



ஈழத்தின் மரபுவழித் தமிழ்ப் புலமையாளராக வாழ்ந்துவரும் முதுபெரும் தமிழறிஞரும், முன்னாள் பத்திரிகையாளருமான புலவர் ம.பார்வதிநாதசிவம் தொகுத்து வழங்கிய இலக்கியக் கட்டுரைகள் அடங்கிய நூலே தமிழ்ச்செல்வம்.

உதயன், சஞ்சீவியில் வெளியான பெரும்பாலான கட்டுரைகளுடன் முரசொலியில் வெளியான கட்டுரைகளும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

மரபுவழித் தமிழிலக்கியங்களின் ஊடாக அறியவரும் அரும்பெரும் கருத்துக்களையெல்லாம் இன்றைய இளந்தலைமுறையினரின் கவனத்தைக் குவித்துப் படிக்கும்படி மிகவும் எளிமைப்படுத்தி இக்கட்டுரைகளைத் தந்துள்ளார்.

பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை தமிழை ஒரு பாடமாகப் பயிலும் மாணவர்களுக்கு மிகுந்த பயனளிக்கக்கூடியதாக இந்நூல் அமைந்துள்ளது.

## 35 கி.அ.சங்கங்களுக்கு மட்டுமே பதிவு இலக்கங்கள் கிடைத்துள்ளன

யாழ்ப்பாணம்,செப்.20

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கும் 35 கிராம அபிவிருத்திச் சங்கங்கள் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தில் பதிவுசெய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட புதிய யாப்பின் பிரகாரம் சங்கங்கள் புனரமைக்கப்பட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பதிவு இலக்கங்கள் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் 102 கிராம அபிவிருத்திச் சங்கங்கள் இயங்கியபோதும், இதுவரை 22 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கும் 13 கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு மட்டுமே பதிவு இலக்கங்கள் கிடைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(207-60)

## வளர்ப்பு நாள்களுக்குக் கர்ப்பத்தடைச் சிகிச்சை

வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கான கர்ப்பத்தடை சத்திர சிகிச்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனை வளாகத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.

குடத்தனை மேற்கு, மணற்காடு, வலிக்கண்டி ஆகிய இடங்களைச் சேர்ந்தோர் அன்றைய தினம் தமது வளர்ப்பு நாய்களைக் கொண்டுவந்து சிகிச்சையினைப் பெறலாம் என அம்பன் பொது சுகாதாரப் பகுதி அறிவித்துள்ளது.

(60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்
**கந்தையா தியாகராசா**

தோற்றம்
24.08.1927

மறைவு
21.08.2008

எங்கள் அன்புத் தந்தையின் பிரிவுச் செய்திகேட்டு ஆறுதல் கூறியோருக்கும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, இன்று (20.09.2008) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தி.சத்தியபாலன் *(மகன் - அதிபர்)*
யா/புனித றோக்ஸ் றோ.க.வி.
*யாழ்ப்பாணம்.*

32/11, பிறவுண் றோட்,
நீராவியடி, யாழ்ப்பாணம். (78593)

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25 | 20 |
| 10 | 09 |
| 1924 | 2000 |



**அமரர் வேலன் பசுபதி**

*( மார்புநோய் வைத்தியசாலை ஊழியர், காங்கேசன்துறை)*

**ஆண்டுகள் பல கடந்தாலும் பப்பா!**
**உங்கள் நினைவுகள் எங்கள் நெஞ்சை விட்டு என்றுமே அகலாது!**

உங்கள் ஆத்ம சாந்திக்காக சந்நிதி முருகனை
வேண்டி நிற்கும்:
**மனைவி, குடும்பத்தினர்.**

த.முகவரி:8/2, கலாமன்ற வீதி.
மானிப்பாய் கிழக்கு,மானிப்பாய்.
நி.முகவரி:மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை. (78603)

## நெடுந்தீவு சைவப்பிரகாசாவில் கல்விக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,செப்.20

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சி நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 11.45 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவகவலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன் கலந்துகொள்வார். (202)

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
*19, முருகேசர் லேன்,நல்லூர்.*

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறோயிலர் இறைச்சிக் கோழி, மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொகையாகக் கொள்வனவு செய்வோருக்கு விஷேட விலைக்கழிவு வழங்கப்படும்.**உதயன் பாம்,** நாயன்மார்கட்டு (முறிவுநெறிவு வைத்தியசாலைக்கு அருகில்)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள ஐஸ்கிறீம் விற்பனை வாகனம், டி பிறீசர்கள், ஜெனரேற்றர்கள் (10k.w, 3 k.w), Hiace Van இற்குரிய தரமான இருக்கைகள் (13 - Seats என்பன விற்பனைக்குண்டு.

விவரங்களிற்கு: **கோகுலன்**
*சங்கரத்தை, வட்டுக்கோட்டை*

## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள Toyostar 11000 BTU AC, மற்றும் அலுவலக பாவனைக் குகந்த பாட்டிசன் (Partition) அலுமியம் பிற்றிங்ஸ் கண்ணாடிகளுடனும், 5 தன்னியக்க கதவுகளுடனும் உடனடி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு - 060 221 4240

## Organ/Violin Notes

Organ,வயலின், Guitar, புல்லாங்குழல், வீணை போன்ற இசைக்கருவிகளுக்கான 300 சினிமாப் பாடல்களின் Notes விற்பனைக் குண்டு. Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள் தினமும் பி.ப. 4 மணியிலிருந்து நடை பெறுகின்றன.

**S.S.Rajendran,**
*75,கோயில் வீதி, நல்லூர்.*
T.P.:-0713055991

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளரான **திரு.க.செல்வம்** அவர்களின் திடீர் மறைவையிட்டு எமது பாடசாலைச் சமூகம் துயருறுவதுடன் அவரது குடும்பத்தவர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றது. அவரது ஆன்மா இளைப்பாறுதல் அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/பாஷையூர் சென். அன்ரனீஸ்
றோ.க.ம.வித்தியாலயம்.

(78595)

## அஞ்சனத்தாழ்வு ஆரோக்கிய அன்னை பெருவிழா - 2008



யாழ்.கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள ஆரோக்கிய அன்னையின் வருடாந்தப் பெரு விழா செப்ரெம்பர் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணிக்கு யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படும். திருப்பலி நிறைவில் திருச்சுருவப் பவனியும் அன்னையின் ஆசீரும் இடம் பெறும்.

**பவனிக்கான வீதிகள்**
கஸ்தூரியார் வீதி-கில்னர் லேன்- ஆரோக்கிய அன்னை ஒழுங்கை.
அன்னையின் அருள்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பங்குத் தந்தையும், பங்கு மக்களும்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**இராசரத்தினம் இரத்தினவேல்**
[ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர்,
கச்சேரி, யாழ்ப்பாணம்]

திதி: சஷ்டி (20.09.2008)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 05.09.1927 | 12.10.2006 |

பந்தபாசங்கள் பற்றுடனே போற்றி
பரமனடி சேர்ந்த அந்நாள் நினைவில்
வந்த ஆண்டிது மறைவின் ஈராண்டு
வாரணத்தோன் பாதம் பற்றி நின்று
சொந்த உணர்வினைத் தூய்மைப் படுத்தி
சொல்லார்ந்த சுருதியாய் என்றும்
கற்பக விநாயகன் நின்னருள் கலந்து
காலமெல்லாம் காக்க வணங்குகின்றோம்

அரச வீதி,
உரும்பிராய் (78570)

**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ



திருமதி
**நாகம்மா கனகரட்ணம்**

தோற்றம்
07.02.1945

மறைவு
21.08.2008

தாய்மடியே உமை நாம் தேடுகின்றோம்
தாரகையும் உருகக் கதறுகின்றோம்
உம் வாழ்வில் அப்பாவை பிரிந்ததில்லையே ஒரு கணமும்
என்ன பிழை செய்தோம் என்று சொல்லாமல் சென்றீரோ
சுற்றமெல்லாம் சொந்தம் என்றெண்ணி வாழ்ந்தீரே - இன்று
அன்னை என்ற சொந்தமின்றித் தவிக்கின்றோமே
காலனவன் கவர்ந்து சென்று மாதம் ஒன்று ஆகியதோ - அம்மா
நமக்கு முன்னே இப்போ நாள் ஒன்று கடந்த உணர்வு
மாதமென்ன ஜென்மமே சென்றாலும் - அம்மா
நீர் வருவீர் என்ற நம்கனவை நனவாக்க மாட்டீரோ
சொர்க்கத்திலும் நீர் நலமாய் வாழ - ஆதி
விநாயகன் பாதம் பணிகின்றோம்.

எமது குடும்பத் தலைவி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் பணியாற்றிய வைத்தியர்கள், தாதிமார், ஊழியர்களை நன்றியுடன் நினைக்கின்றோம். அன்னாரின் இறுதிச் சடங்கில் கலந்து அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். இன்று (20.09.2008) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் கரங்கூப்பி அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*அளவெட்டி தெற்கு.* (78578)

## தீவக வலய ஆசிரியர்களுக்கு செயலமர்வுகள்

யாழ்ப்பாணம்,செப்.20

தீவக வலயத்தில் தரம் 9 இல் பயிலும் மாணவர்களுக்குப் பாதுகாப்புத் தேர்ச்சிகள், கற்றல் அமுல்படுத் தல் தொடர்பான ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப் படவுள்ளன.

உடற்கல்வி பாட ஆசிரியர்களுக்கு இன்றும், நாளையும் ஏனைய ஆசிரியர்களுக்கு எதிர்வரும் சனிக்கிழமையும் கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் செயலமர்வுகள் நடைபெறவுள்ளன.

இந்த செயலமர்வுகளில் வலய வளவினர்களுடன் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ், சாரணர்கள், ஆர்வலர்கள் ஆகியோரும் வளவாளர்களாகப் பங்கு பற்றுவர் என தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (60)

## மரண அறிவித்தல்

### மார்க்கண்டு செல்வராசா



கோப்பாய் தெற்கு, மாதா கோயிலடியைப் பிறப்பிடமாகவும், டச்சுவீதி, உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு செல்வராசா (18.09.2008) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மார்க்கண்டு - காலஞ்சென்ற ராசாத்தி தம்பதியரின் மூத்த புதல்வனும் மார்க்கண்டு - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயந்தியின் அன்புக் கணவரும் கிரிஷாந், சர்மி ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திராதேவி, இந்திராராஜா, புவனேந்திரராஜா, லலிதாதேவி, கலாதேவி, ரங்கராணி ஆகியோரின் அன்புச் சகோதரரும் சசியன், ஜெனிதா, சத்தியசீலன், ஜெயமணி, ரவிநாதன், ரங்கநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.09.2008) சனிக்கிழமை மு.ப.10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*டச்சுவீதி, உடுவில்,*
*சுன்னாகம்.*
T.P. *021 4591284* (78592)

தகவல்:
**மனைவி,**
**பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இராணுவத் திட்டங்களை விட முக்கியத்துவம் மக்களின் வாழ்நிலைப் பிரச்சினைகளுக்கே

இலங்கை இனப்பிரச்சினையும் அதனால் வெடித்துள்ள குரூரமான உள்நாட்டுப் போரும் இப்போது மிக மோசமான கட்டத்தை எட்டியுள்ளன.

எண்ணிப்பார்க்க முடியாத மனிதப் பேரவலக் கொடூரம் உருவாகும் ஆபத்து ஏதுநிலை புலப்படுகின்றது.

இந்த நிலைமையின் மோசமான தன்மையைப் புரிந்து கொண்டுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமைகள், இவ்விவகாரம் குறித்து ஆராய்வதற்காகத் தமது அவசரக் கூட்டம் ஒன்றை அடுத்து வரும் சில நாள்களுக்குள் நியூயோர்க்கில் கூட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

வன்னியில் யுத்தம் தீவிரமடைந்திருக்கிறது. இப்பத்தியில் ஏற்கனவே நாம் சுட்டிக்காட்டியமை போன்று அண்மைக்கால யுத்தத்தினால் வன்னியில் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - சுமார் இரண்டு லட்சம் மக்கள் ஏதிலிகளாக இடம்பெயர்ந்துள்ளனர். அங்கு யுத்தம் தொடர்ந்து மென்மேலும் தீவிரமடைந்து வருவதால் அகதிகளின் எண்ணிக்கை மேலும் பல்லாயிரக்கணக்கால் உயரும் அச்ச நிலை உருவாகியுள்ளது.

இந்த அகதி மக்களின் அவசர - அத்தியாவசிய - மனிதாபிமானத் தேவைகளை விரைந்து நிறைவு செய்வதில் உள்நாட்டு - வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களும் ஐ.நா.அமைப்புகளும் அதீத பங்காற்றி வந்தன.

போர் மூர்க்கமான கட்டத்தை எட்டி - ஏதிலிகளின் அவசர மனித நேயப் பிரச்சினைகள் என்றுமில்லாதவாறு உச்சக்கட்டத்தை அடைந்திருக்கும் இச்சமயத்தில் தான், அவர்களின் மனிதாபிமானத் தேவைகளை நிறைவு செய்யும் தொண்டர் அமைப்புகளைப் புலிகளின் பிரதேசத்திலிருந்து கூண்டோடு காலி பண்ணியிருக்கின்றது அரசு.

இதனால் - வன்னியின் மீது அரசு தொடுத்துள்ள பயங்கர யுத்தத்தின் விளைவாக அங்கு ஏற்படும் மோசமான மனிதாபிமானப் பிரச்சினை, தொண்டர் அமைப்புகள் வெளியேற்றப்பட்டமையால் - இன்னும் மிக மோசமான கட்டத்தை எட்டும் என்று அஞ்சப்படுகின்றது.

இந்தப் பின்புலத்திலேயே வன்னியின் மனிதாபிமான நிலைவரம் குறித்து ஆராயும் நோக்குடன் இணைத் தலைமை நாடுகளான - அமெரிக்கா, ஜப்பான், நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் (தற்சமயம் ஒன்றியத்துக்கு பிரான்ஸ் தலைமை வகிப்பதால் அந்த நாடு) ஆகியன அவசரக் கூட்டம் ஒன்றை நியூயோர்க்கில் அடுத்த வாரத்தில் நடத்தவிருக்கின்றன.

வன்னியிலிருந்து உள்நாட்டு - வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகளையும், ஐ.நா.அமைப்புகளின் பிரதிநிதிகளையும் வெளியேற்றிவிட்டு இப்போது, அங்கு 'புலிகள் நச்சுவாயு ஆயுதங்களைப் பயன்படுத்துகின்றார்கள்' என்றும், தாங்களும் நினைத்தால் புலிகள் பயன்படுத்தும் நச்சு ரக ஆயுதங்களை விட அதிக நச்சு வீரியமுடைய ஆயுத ரகங்களைப் புலிகளுக்கு எதிராகப் பயன்படுத்த முடியும் என்றும் பிரகடனப்படுத்துகின்றது அரசு.

இவை, நிச்சயமாக இணைத்தலைமைகளின் கவனத்தை அதிகம் ஈர்த்திருக்கும் என்று கருதலாம்.

ஒருபுறம் - மனிதப் பேரவல நெருக்கடி.

மறுபுறம் - நச்சுவாயு ஆயுதங்களை யுத்தத்தில் சம்பந்தப்பட்ட ஒரே தரப்போ அல்லது இரு தரப்புகளுமோ பயன்படுத்தலாம் என்ற ஆபத்து நிலைமை.

இந்த இரண்டு சிக்கல்களையும் சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்கான வாய்ப்புகளை ஆராய்வதும், அது தொடர்பான முயற்சிகளில் ஈடுபடுவதுமே இணைத் தலைமை நாடுகளின் தற்போதைய அவசரக் கூட்ட முயற்சியின் உள்நோக்கமாக இருக்கும் என்று கருதலாம்.

இதேசமயம் -

''ஐ.நாவின் அல்லது உள்நாட்டு, வெளிநாட்டுத் தொண்டர் அமைப்புகளுக்கு ஏற்றவாறு இலங்கை அரசு தன்னுடைய இராணுவ நிகழ்ச்சித் திட்டங்களை மாற்ற முடியாது '' - என்று இலங்கை ஜனாதிபதியின் சகோதரரும், ஜனாதிபதிக்கு அடுத்து பாதுகாப்பு விடயங்களில் அதிக செல்வாக்கு உடையவரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார்.

அவரைப் பொறுத்தவரை, அவரது கூற்று சரியாக இருக்கலாம். ஆனால் அப்பாவிப் பொதுமக்களின் உயிருடன் விளையாடும் வகையில், அவர்களில் லட்சக்கணக்கானோரை மிக மோசமான மனிதப் பேரவல மற்றும் பேரழிவுக் கொடூரத்துக்குள் தள்ளிக்கொண்டு தமது இராணுவ நிகழ்ச்சித் திட்டத்தை அவர் முன்னெடுப்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளாது என்ற யதார்த்தத்தையும் அவர் புரிந்து கொள்ளவேண்டும்.

எனவே, ஐ.நா.மற்றும் உள்நாட்டு - வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களின் எதிர்பார்ப்புகள் அல்ல, அரசின் இராணுவ நிகழ்ச்சித்திட்டம் அல்ல, பல லட்சக் கணக்கான அப்பாவி மக்களின் உயிர் மற்றும் வாழ்நிலைப் பிரச்சினைகள் பற்றிய நிகழ்ச்சித் திட்டமே அதிவிசேடமாக முக்கியமானது என்பதை இணைத் தலைமை நாடுகளின் நியூயோர்க் கூட்டம் தெளிவுபடுத்தும் என எதிர்பார்க்கலாம்.

அதுவும், பொதுநலவாய அமைப்பு நாடுகளின் சந்திப்புக்காக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியூயோர்க் விஜயம் செய்யும் சமயத்தில் இக்கூட்டம் நடைபெறுவதால், எந்த நிகழ்ச்சி நிரலுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என்ற அறிவுறுத்தலை இணைத் தலைமைகள் ஏதேனும் மார்க்கத்தில் அவருக்கும் தெளிவாகத் தெரியப்படுத்தக்கூடும் என்றும் நம்பலாம்.

# வன்னி மக்களின் அவல நிலைமைகள் குறித்து ஜெனிவா மனித உரிமைகள் அமர்வில் கவலை

## ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்கள் கண்டனம்

வன்னிப் பெருநிலப்பரப்பில் மக்கள் இடம்பெயர்ந்துள்ள அவல நிலைமைகள் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரான்ஸ் மற்றும் நெதர்லாந்து தூதுவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

ஜெனிவாவில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அனைத்துலக மனித உரிமைகள் ஆணையத்தின் ஒன்பதாவது அமர்வு இடம்பெற்றது. அங்கு மனித உரிமைகளை பற்றிய விவாதத்தில் உரையாற்றும்போதே தூதுவர்கள் இவ்வாறு கவலை தெரிவித்தனர்.

போர் நடவடிக்கைகளினால் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்குவதாகவும் நிவாரணங்கள், சுகாதார மற்றும் அடிப்படை வசதிகள் போதுமானவையாக இல்லை என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரான்ஸ் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, ஆள்கடத்தல், காணாமற்போதல், கொலைகள் போன்ற மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எதுவும் சிறிலங்கா அரசாங்கத்தினால் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் அவர் கண்டனம் தெரிவித்தார்.

அதேவேளை போர் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு பேச்சுக்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்குரிய ஆரோக்கியமான கலந்துரையாடல் ஒன்றில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் ஈடுபட வேண்டும்-என்று நெதர்லாந்து தூதுவர் வலியுறுத்தினார்.

அனைத்துலக மனித உரிமைகள் ஆணையத்தின் ஒன்பதாவது அமர்வில் ஐக்கிய நாடுகள் சபையின் அனைத்துலக மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, அமெரிக்க மனித உரிமைகள் கண்காணிப்பகம், அனைத்துலக மனித உரிமை அமைப்புக்கள் உட்பட மனித உரிமை ஆர்வலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இந்த உரையில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் அறிக்கைகளாக சிறிலங்கா அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் இராஜதந்திரிகள் தெரிவித்தனர். (50)

## சீரடி பாபாவின் பிறந்ததினமும் சத் சரிதம் வாசிப்பும்

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்,பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் சீரடி பாபாவின் பிறந்த தின விழாவும் சத் சரிதம் வாசிப்பும் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் நடைபெறவுள்ளன.

தினமும் காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் வரை சீரடி பாபாவின் சத் சரிதம் வாசிக்கப்படும்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (28.09.2008) சீரடி பாபாவின் பிறந்த தினத்தன்று வேத பாராயணம், காயத்திரி மந்திர ஜெபம், தியானம், பஜனை ஆகியவற்றுடன் நாராயண சேவையும் நடைபெறவுள்ளன. (60)

## அல்லைப்பிட்டி பாதுகாப்பு வலயத்துக்குள் நுழைந்த 6 பேர் பிணையில் விடுதலை

யாழ்ப்பாணம், செப்.20

கடந்த மார்ச் மாதம் 14 ஆம் திகதி அல்லைப்பிட்டிப் பாதுகாப்பு வலயத்துக்குள் படகு மூலம் ஊடுருவ முயன்றதாகக் கைது செய்யப்பட்ட 6 பேரையும் நிபந்தனையின் அடிப்படையில் பிணையில் செல்வதற்கு ஊர்காவற்றுறை நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

அல்லைப்பிட்டிக் கடற்பிரதேசம் ஊடக ஊடுருவ முயன்றதாகத் தெரிவித்துக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இந்த 6 பேரும் ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு கடந்த 6 மாதங்களாக விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

2 பெண்களும் 4 ஆண்களுமாக 6 பேரும் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

தமக்கான பாதுகாப்பை தாமே உறுத்திப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற முக்கிய நிபந்தனையுடனும், இவர்கள் தாம் தங்கியுள்ள இடத்திற்கு அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் அல்லது இராணுவ முகாமில் கையொப்பமிட வேண்டும், தாங்கள் தங்கும் இடத்திலிருந்து வேறு இடத்துக்குச் செல்வதானால் நீதிமன்றத்தின் அனுமதி பெறவேண்டும் என்ற நிபந்தனைகளுடனும் தலா 25 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும் தலா ஒரு லட்சம் ரூபா சரீரப் பிணையிலும் செல்ல ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவன் அனுமதி வழங்கினார்.

இவர்களுக்குப் பிணை நிற்பவர்கள் தமது பகுதி கிராம அலுவலரிடம் கடிதத்துடன் வந்து பிணைக்கான கையொப்பம் இடவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (50)

### தனித்துப்பணிசெய்யும் செஞ்சிலுவை கூறுகிறது

# கள நிலைவரங்களை அவதானித்தே மனிதாபிமானப் பணிகளைச் செய்கிறோம்

## நாளாந்தம் 2 தரப்புக்களிடமும் பாதுகாப்பு உத்தரவாதம்

கொழும்பு, செப்.20

கள நிலைவரங்களை அனுசரித்தே எமது மனிதாபிமானப் பணிகளை நாம் மேற்கொள்கிறோம்.

நாளாந்தம் பாதுகாப்புப் படையினரிடமும் விடுதலைப் புலிகளிடம் பாதுகாப்பு உத்தரவாதம் பெற்றே எமது பணிகளை முன்னெடுக்கின்றோம்.

வன்னியிலிருந்து ஐ.நா. அமைப்புகள் உட்பட சகல சர்வதேச தொண்டு நிறுவனங்களும் அரசாங்க உத்தரவை ஏற்று வெளியேறிய பின்னரும்-

செஞ்சிலுவைச் சங்கச் சர்வ தேசக் குழு ஒன்றே தனித்து நின்று மனிதாபிமானப் பணிகளைச் செய்து வருகின்றது.

கடும் போர் நடக்கும் பிரதேசத்தில், செஞ்சிலுவைக் குழு எவ்வாறு பணியாற்றுகின்றது என்று கேட்டபோதே குழுவின் பதில் பேச்சாளர் முன்கண்டவாறு சொன்னார்.

தமது கஷ்டமான, உயிராபத்து நிறைந்த பணி குறித்து மேலும் தெரிவிக்கையில்-

ஐ.சி.ஆர்.சிக்கு உள்ள விஷேட அதிகாரத்துக்கு அமைவாக அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் நாம் வன்னியில் மனிதாபிமான பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம். கிளிநொச்சிக்கு அண்மையில் மோதல்கள் தீவிர மடைந்துள்ளதையடுத்து, கள நிலைமைகளை கவனத்தில் கொண்டே, மனிதாபிமான பணிகளை முன்னெடுத்து வருகிறோம்.

ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் எமது வழமையான பணிகளை மேற்கொண்டு வருவதோடு, இடம் பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளையும் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றோம்-என்றார். (அ)

# 'மனிதாபிமானத்திற்கான தகவல் பரிமாற்றம்' மும்மொழிகளிலும் திறந்த கட்டுரைப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.20

தகவல் பரிமாற்றம் மீதான சிவில் சமூக வலையமைப்பு 'மனிதபிமானத்திற்கான தகவல் பரிமாற்றம்' என்னும் தலைப்பில் திறந்த கட்டுரைப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

15-19 வயதுப் பிரிவு'ஏ' 19 வயதுக்கு மேற்பட்ட பிரிவு (பிரிவு 'பி') என இரு பிரிவுகளாக இப்போட்டி நடத்தப்படவுள்ளது.

பிரிவு 'ஏ'யில் வெற்றி பெறும் முதல் 3 பேருக்கு முறையே ரூபா 7 ஆயிரத்து 500, ரூபா 6 ஆயிரம், ரூபா 4 ஆயிரம் என்ற வகையிலும்-

பிரிவு 'பி'யில் வெற்றி பெறும் முதல் 3 பேருக்கு முறையே ரூபா 10 ஆயிரம், ரூபா7 ஆயிரத்து 500, ரூபா5 ஆயிரம் என்ற வகையிலும் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

மும்மொழிகளிலும் நடத்தப்படவுள்ள இப் போட்டிகளுக்கான ஆக்கங்களை அடுத்த மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

ஆக்கங்களை தபால் மூலம் அனுப்புவதாயின் 'Information Analyst,Consortium of Humanitarian Agencies, No. 86, Rosmead Place, Colombo 07' என்ற முகவரிக்கும்-

மின்னஞ்சல்மூலம்அனுப்புவதா யின் 'infoanalyst@cha.lk' என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## இன்று இடம்பெறும் மின்வெட்டு

யாழ்ப்பாணம்,செப்.20

திருத்த வேலைகளைச் செய்யும் பொருட்டு இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை குறிப்பிட்ட சில இடங்களில் மின்சார விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம்பகுதி, குப்பிளான், மயிலங்காடு, ஏழாலைப்பகுதி, கட்டுவன், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களிலே மின்சாரம் தடைப்படும் என இலங்கை மின்சாரசபை யாழ்பிரதேச மின்பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (60)

## நாளை

| | |
|---|---|
| புரட்டாதி 05 | 21.09.2008 |
| | ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | ஸப்தமி |
| | பி.இ. 02.15வரை |
| நட்சத்திரம் : | ரோகிணி |
| | மு.இ. 5.03வரை |
| சுபநேரம் : | 09.02 - 10.32 |
| [illegible] | [illegible] |

# கத்தோலிக்க ஆலயங்களில் நாளை அமைதி தேடி சமாதானப் பேரணி

யாழ்ப்பாணம், செப்.20

பன்னாட்டு சமாதான நாளாகிய நாளை 'அமைதி தேடி சமாதானப் பேரணி' ஒன்றை யாழ்.மறை மாவட்ட நீதிசமாதானத்திற்கான ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது.

இப் பேரணி நாளை காலை 7.15 மணிக்கு கத்தோலிக்க ஆலயங்களிலிருந்து புறப்பட்டு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தை அடையும்.

இந்த ஆலயத்தில் அமைதி, நிறைவான நிம்மதி வேண்டியும் அது நிரந்தரமாக வேண்டும் என்றும் இறைவனுக்கு அபாயக்குரல் எழுப்பும் வழிபாடு இடம்பெறும். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரமங்களையும் சீரிய நல்வாழ்வையும் ஒரு சேர அருளும் சனி பகவான்



சனி பகவானைப் போல கொடுப்பவரும் இல்லை; அவரைப் போல கெடுப்பவரும் இல்லை என்பது முதுமொழி. ஆம்! பக்தர்கள் மத்தியில் சனி பகவானின் மீது ஒரு வித பயம் உண்டு.

ஏழரைச் சனி, அட்டமத்துச் சனி, ஜன்மத்துச் சனி, சனி பார்வை என்றெல்லாம் காலவேளை உள்ளன. அக்காலங்களில் விஷேசமாகச் சனி வழிபாட்டினை நாம் மேற்கொள்ள வேண்டும். எனினும், பன்னிரு மாதங்களில் புரட்டாதி மாதம் தான் சனி வழிபாட்டு மாதமாக உள்ளதால் புரட்டாதி மாதச் சனிக்கிழமைகளில் சமய அனுஷ்டானங்களுடனான வழிபாட்டினை எல்லோரும் மேற்கொள்கின்றோம்.

சனிக்கிழமைகளில் எண்ணெய் தேய்த்து, அரப்பு, எலுமிச்சை என்பன வைத்து நன்கு முழுக வேண்டும். பின்பு கோயிலுக்குச் சென்று சனீஸ்வரன் சன்னிதியில் எள் எண்ணெய் விளக்கு ஏற்றி வழிபாடு செய்தல் நன்று. கறுப்புத் துணியையும், நீல நிறத் துணியையும் சனீஸ்வரப் பெருமானுக்குச் சார்த்தி, கருங்குவளைப் பூ, வன்னி இலை என்பவற்றால் அர்ச்சனை செய்து சனி தோஷத்தைப் போக்கி நல்வாழ்வைத் தரும்படி வணங்கவேண்டும். கறுப்பு நிற எள்ளைச் சிவாச்சாரியாருக்குத் தானமாகக் கொடுக்கலாம். எள்ளுக் கலந்த சாதத்தை நைவேதனஞ் செய்து, அதனைக் காகத்துக்கு உணவாகக் கொடுக்கவேண்டும்.

அதன்பின்பு சிவன், விஷ்ணு முதலான தெய்வங்களுக்கு அர்ச்சனை செய்து வழிபாடு செய்ய வேண்டும். ஒரு பாத்திரத்தில் எண்ணெய்விட்டு சனீஸ்வரனுக்கு அர்ச்சனை நடைபெறும்.

இந்தியாவில் திருநள்ளாற்றில் உள்ள சனீஸ்வரன் சந்நிதியில் மேற்கூறிய வழிபாட்டு முறைகள் உள. சீர்காழியில் சனியுடன் ராகுவும் உள்ளதால் இங்கும் பக்தர் தரிசனஞ் செய்கின்றனர். இலங்கையில் திருகோணமலையில் உள்ள சனீஸ்வரன் ஆலயம் மிகவும் பிரபல்யம் வாய்ந்தது. சனிதோஷ நிவர்த்திக்கான வழிபாடுகள் இங்கு சிறப்புற நடைபெறுகின்றன.

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் ஆலயம், யாழ் பெருமாள் கோயில், பருத்தித்துறை வல்லிபுரக் கோயில், தெஹிவளை பெருமாள் ஆலயம், கீரிமலை சிவன் கோவில், கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவானேஸ்வரர் தேவஸ்தானம் முதலான ஆலயங்களில் புரட்டாசிச் சனிக்கிழமை வழிப்பாட்டிற்கு எண்ணிறைந்த பக்தர்கள் சென்று வழிபடுவது இங்கு குறிப்பிடக்கூடியதொன்று.

முனிவர்கள், தேவர், ஏனைய மூர்த்திகள் முதலானோர்கள்
மனிதர்கள் சகல வாழ்வுன் மஹிமை அல்லால் வேறுண்டோ
கனிவுளதெய்வம் நீயே, கதிர்சேயே காகம் ஏறும்
சனியனே! உனைத் துதித்தேன் தமியேனேற் கருள் செய்வாயே!

எனச் சனிஸ்வர பகவானைத் தொழுவோமாக! சூரியனின் மகனான சனீஸ்வரன் தலைசிறந்த சிவபக்தன். சிவபூஜா துரந்தரன். ஆகையினால், சனீஸ்வரன் எனவும் அழைக்கப்படுகிறார்.

சனிதோஷம் உள்ளவர்கள் தினமும் மதிய போசனச் சமையல் முடிந்ததும் சமைத்தவற்றில் சிறிதளவு எடுத்துக் கறுப்பு எள்ளு அல்லது நல்லெண்ணை கலந்து காகத்துக்கு உண்ணக் கொடுத்தபின் மதிய போசனஞ் செய்தல் மிகச் சிறந்தது.

தமிழ்ப் பஞ்சாங்க முறைப்படி இன்று புரட்டாதி மாதம் 4ஆம் திகதியன்று இந்த சர்வதாரி வருடத்துக்கான முதலாவது புரட்டாதி சனி விரதம் ஆரம்பமாகி, நான்காவது சனிக்கிழமை கடைசிச் சனி விரதமாக அமையவுள்ளது.

# விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு, செப்.20

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெறும் 13, 16 வயதுப் பிரிவினர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவ ரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

13 வயதுப் பிரிவு

* சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி எதிர் தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை.
* கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம் எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலயம்.

16 வயதுப் பிரிவு

* உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் எதிர் சுன்னாகம் மயிலணி சைவ மகா வித்தியாலயம்.
* ஏழாலை மகா வித்தியாலயம் எதிர் தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை.

★ ★ ★

யாழ்ப்பாணம்,செப்.20

கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவையினர் வடமாகாணத்தில் பணியாற்றிய 10 வருட சேவைப் பூர்த்தியை முன்னிட்டு யாழ்.கல்வி வலயத்துடன் இணைந்து பாடசாலை அணிகளுக்கு இடையே வலைப் பந்தாட்ட சுற்றுப்போட்டியை நடத்தவுள்ளது.

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள 16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் பங்கு பற்றவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* கொழும்புத்துறை இ.ம.வி எதிர் சாள்ஸ் ம.வி.
* அச்சுவேலி ம.க. எதிர் திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை.
* யாழ்.இந்து மகளிர் கல்லூரி எதிர் கோப்பாய் கந்தவேள் வித்தி.
* கனகரத்தினம் ம.ம.வி.எதிர் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி
* வேம்படி மகளிர் உ.த.பா எதிர் உரும்பிராய் இந்துக் கல்லூரி.
* கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் அத்தியார் இ.க.
* நட.இராமலிங்கம் ம.வி. எதிர் முத்துத்தம்பி ம.வி.
* சென்.ஜோசப் ம.வி. எதிர் சென். ஜோன்ஸ் மகளிர்.

அரையிறுதிப் போட்டிகள்நாளைகாலை 8.30மணிக்குஇடம்பெறும். 3ஆம்இடத்தைத் தெரிவு செய்வதற்கான ஆட்டம் நாளை மு.ப. 11 மணிக்கு நடைபெறும்.

# 'றெக்கிளமேசன் சனசமூக நிலைய கூட்டம் ஞாயிறன்று

யாழ்ப்பாணம்,செப்.20

குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி மாலை 5 மணிக்கு நடைபெறவிருந்த இந்தக் கூட்டம் போதியளவு பொதுமக்கள் சமுகமளிக்காமையினால் ஒத்தி வைக்கப்பட்டதாக சனசமூக நிலைய நிர்வாகம் அறிவித்துள்ளது. (50)

# இன்று நடக்கும் சிறுவர் அரங்கு

யாழ்ப்பாணம்,செப்.20

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தால் நடத் தப்படும் சிறுவர் அரங்கு நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடத் தப்படவுள் ளது.

வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நடைபெறுகின்ற இந்த நிகழ்வு யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் ஆகிய கோட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சிறுவர் அரங்க நிகழ்ச் சிகளிலிருந்து வலயமட்டத் தெரிவு இடம் பெறும் என தெரிவிக்கப் பட்டது. (60)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை திருமதி ம.வரதராசா அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி மகேஸ்வரி செல்லையா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலய சமூகம்

## கண்ணீர் அஞ்சலி

எமது வங்கியின் சக ஊழியர்களான கு.பிரபாகரன் அவர்களின் அன்புத் தந்தையும் த.கிரிதரன் அவர்களின் பாசமிகு மாமனாருமாகிய

**சின்னத்தம்பி கதிர்காமநாதன்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
(தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்).

## 31ஆம் நாள் கண்ணீர்க்காணிக்கை

யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் ஆசிரியை திருமதி ஈஸ்வரி செல்வதயாளன் அவர்களின் அன்புத் தந்தை

**பெரியதம்பி பொன்னையா**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பழைய மாணவர் சங்கம்.
(78585)

## முழு இரவு ஜெபம்

அசெம்பிளி ஒப் கோட் யாழ்ப்பாண/ மானிப்பாய் சபைகளில் நாட்டிற்காக முழு இரவு ஜெபம் நடைபெறவுள்ளது. எனவே சகல விசுவாசிகள், ஆர்வமுள்ள அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

இடம்: சர்வதேச பாடசாலை, மானிப்பாய்
காலம்: 26.09.2008 வெள்ளிக்கிழமை
நேரம்: இரவு 9 மணி முதல் காலை 5 மணி வரை

ASSEMBLY OF GOD
14,Rasavinthoddam Road,
Jaffna. (78589) தலைமைப் போதகர்

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் நவரட்ணராஜா வீதியில் உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:-பா.கொசினிகேசன்
இல.03, வளாக வீதி,
திருநெல்வேலி.

## கடை வாடகைக்குண்டு

இல.49 (185) K.K.S வீதியில் யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள கடை வாடகைக்கு.

தொடர்பு:-021-222 6923
021-222 9941
(78598) 021-226 3537

## Cake Decorating Classes

ஐசிங் கேக் வடிவமைத்தல் பயிற்சி வகுப்புகள்

21.09.2008 ஞாயிறு
பி.ப 2.30 மணிக்கு
ஆரம்பமாகின்றது.



ம.ம.வி.வீதி,
நெல்லியடி.


## யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்-(வ-து)
## திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்

# பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் பின்வரும் நிரந்தர பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை அலுவல வேலை நாள்களில் ரூபா 10/= செலுத்திப் பெற்றுப் பூர்த்தி செய்து 06.10.2008 ஆம் திகதி பி.ப. 4.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

1. பதவி பொதுமுகாமையாளர் (நிரந்தரம்)
2. பதவி இல. 165/88 இன் படி சம்பள குறி இல. 101/06
3. சம்பளத் திட்டம் : 66/ 06 இன் படி
11950–155X10–180X10–15300

**4. அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

அ. கூட்டுறவுச் சங்க ஊழியர் 7 ஆம் சம்பளத் திட்ட பதவி ஒன்றில் 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 8 ஆம் சம்பளத் திட்ட பதவி ஒன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது.

ஆ. அங்கிகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமையுடன் ஏற்றுக்கொள்ளப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்ட பதவி ஒன்றில் 8 வருடங்களுக்கு குறையாத அனுபவம். இந்த எட்டு வருடகால அனுபவத்தில் 2 வருடங்களுக்குக் குறையாமல் சிரேஷ்ட முகாமை மட்டப் பதவி ஒன்றில் அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர்தரம்) சான்றிதழ்/ க.பொ.த. (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியும் அங்கிகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்டப் பதவி ஒன்றில் 10 வருடங்களுக்குக் குறையாத அனுபவம். இப்பத்து வருட கால அனுபவத்தில் சிரேஷ்ட முகாமை மட்டப் பதவியில் குறைந்தது 2 வருட கால அனுபவம்.

**5. பொது நிபந்தனைகள்**

1. வயது 06.10.2008 ஆம் திகதி 18 வயதுக்குக் குறையாதவர்களாயும் 45 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல்வேண்டும்.
2. யாழ். மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்கு சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு பிரமாணங்களுக்கு அமைவாக நிர்வாகத்தினால் விதிக்கப்படும் உரொக்கப் பிணையும் ஆதனப் பிணையும் செலுத்தல் வேண்டும்.
4. ஆள்சேர்ப்பு செய்யப்படுபவர் இரண்டு வருட கால தகுதிகாண் அடிப்படையில் பதவியில் அமர்த்தப்படுவர்.
5. கல்வித் தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தை உறுதிப்படுத்தல் நற்சான்றிதழ்,தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்களும் சரிவர பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.
6. தற்போது கூட்டுறவுச் சேவையில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது என்பதுடன் அவர்கள் பதவிகளுக்காக விண்ணப்பிக்கும்போது தமது விண்ணப்பங்களைச் சம்பந்தப்பட்ட சங்கத்தினூடாக அனுப்புதல் வேண்டும். இத்தகைய ஊழியர்கள் நேரடியாக விண்ணப்பங்களை அனுப்பினால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட பின்னர் அது வெளிப்படுமிடத்து நியமனத்தை இல்லாதொழிக்கப்படும்.
7. விண்ணபத்தில் காட்டப்படும் தகவல்களும் இணைப்புக்களும் உண்மையானதும் செம்மையானதுமென உறுதிப்படுத்துவதோடு ஏதெனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையானதேனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதனை தாங்கள் அறிந்துகொள்ளவேண்டும்.
8. நேர்முகப் பரீட்சையின் பொழுது சகல சான்றிதழ்களின் மூலப்பிரதி சமர்ப்பிக்கப்படவேண்டும்.

20.09.2008 தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடா நாட்டைச் சேர்ந்த இருவர் சமாதான விருதுக்குத் தெரிவு



யாழ்ப்பாணம்,செப்.20

சமாதானத்தை உருவாக்குவதில் மிக ஊக்கத்துடன் கடந்த இருபது வருடங்களாக அயராது உழைத்து வருவதற்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவருக்கு சமாதான விருதுகள் கிடைத்துள்ளன.

இலங்கைத் திருச்சபையின் குருமுதல்வர் வண.எஸ்.பி.நேசகுமார், சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவின் செயலாளர் எஸ்.பரமநாதன் ஆகிய இருவருமே விருது பெறுபவர்கள் ஆவர்.

தர்மசக்தி தேசியக் குழுவும் பிரயத்தன மக்கள் இயக்கமும் இணைந்து வழங்கும் இந்த விருது மொத்தம் பத்துப் பேருக்கே இவ்வருடம் வழங்கப்பட்டுள்ளது.

வண.மாதம்பகம் அசாஜி நாயக்க தேரரைச் செயலாளராகக் கொண்ட தர்மசக்தி தேசியக் குழுவும், கலாநிதி குமார் ரூபசிங்காவைச் செயலாளராகக் கொண்ட பிரயத்தன மக்கள் இயக்கமும் கடந்த மூன்று வருடங்களாக சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு இந்த விருதினைவழங்கிவருகின்றன.



சமாதானத்தை வளர்த்தல், சமாதான சகவாழ்வு, மனித உரிமைகளை நிலை நாட்டப் பாடுபடுதல் ஆகிய சேவைகளுக்காக இந்த விருது வழங்கப்படுவது குறிப் பிடத்தக்கது.

நாளை (செப்ரெம்பர் 21 ஆம் திகதி) சர்வதேச சமாதான தினமாகும். அதனை முன்னிட்டு நாடெங்கிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட பத்துப் பேருக்கும் சமாதான விருதுகள் கொழும்பில் உள்ள சவ்சிறிபாயவில் நாளை பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகும் நிகழ்வில் வழங்க ஏற்பாடாகி உள்ளது.

(அ)

# கரவெட்டியில் சிதைவடைந்த எலும்புக் கூடு பொலிசாரால் நேற்று மீட்கப்பட்டது

மந்திகை, செப். 20

கரவெட்டி, மண்டானில் நேற்று நண்பகல் 2 மணியளவில் சிதைவடைந்த நிலையில் எலும்புக்கூடு ஒன்று நெல்லியடிப் பொலிஸாரால் மீட்கப்பட்டது

பொலிசாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் பேரில் பருத்தித்துறை மாவட்ட நீதிவான் க. அரியநாயகம், யாழ். சட்ட வைத் திய அதிகாரி எஸ்.இளங்கோவன் ஆகியோர் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினர்.

30 இற்கும் 35 வயதுக்கிடைப்பட்ட வயது மதிக்கத்தக்கவரின் இந்தச் சடலம் தலை வேறு, கால் வேறு, உடல்வேறாக எலும்புகளாகக் காணப்பட்டது.

சடலம் ஆண் ஒருவரினதோ பெண் ஒருவரினதோ என அடையாளம் காண முடியாத நிலையில் காணப்படுவதாகவும் மரபணு பரிசோதனை மூலமே இனங்காண முடியும் எனவும் கூறப்பட்டது.

எலும்புக் கூடு காணப்பட்ட பற்றைக் காட்டுக்கு சமீபமாக நச்சுத் திரவப் போத்தல் ஒன்றை மீட்டுள்ள பொலிசார் இச் சம்பவம் தற்கொலையா? கொலையா? என்பது குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

எலும்புக் கூட்டை பருத்தித்துறை வைத்திய சாலைக்கு அனுப்புமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(அ-1-218)

## சாயி சேவா நிலையத்தில் நாளை இரத்ததானம்

யாழ்ப்பாணம், செப். 20

அகில உலக இரத்ததான நாளையொட்டி (யாழ். பல்கலைக்கழகம் முன்பாக உள்ள) பகவான் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் நண்பகல்வரை இரத்ததான நிகழ்வு நடைபெறும்.

அனைவரும் இம் மகத்தான சேவையில் பங்குபற்றலாம் என்று ஸ்ரீசத்திய சாயி சேவா நிறுவனத்தினர் அறிவித்துள்ளனர்.

# இலங்கைப் பிரச்சினையில் அரசியல் தீர்வுகாண மத்திய-மாநில அரசுகள் முயற்சிக்க வேண்டும்

## மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வரதன் வலியுறுத்தல்

வேலூர், செப். 20

பற்றி எரிந்து கொண்டிருக்கும் இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண மத்திய, மாநில அரசுகள் தீவிர முயற்சி எடுத்து விரைந்து செயற்படவேண்டும்.

- இவ்வாறு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் என் வரதராஜன் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் அரசபடைகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான சண்டை உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது. இதனால் அங்குள்ள மக்கள் இருக்க இடமின்றி ஏதிலிகளாக காடுகளிலும் மர நிழலிலும் வாழும் துயரமான நிலை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து ஐ.நா. மற்றும் தொண்டர் அமைப்புகள் வெளியேற்றப்பட்ட நிலையில் அங்கு பெரும் மனிதப் பேரவலம் தலைவிரித்தாடுகின்றது.

எனவே, இலங்கைப் பிரச்சினையில் அரசியல் ரீதியான தீர்வை ஏற்படுத்தி அங்குள்ள மக்கள் நிம்மதியாகவும் அமைதியாகவும் வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த மத்திய, மாநில அரசுகள் விரைந்து செயற்படவேண்டும் - என்றும் வரதராஜன் கூறினார்.

வேலூரில் நேற்றுமுன்தினம் காலை மாவட்ட கட்சி அலுவலகத்தில் வைத்துப் பேட்டியளித்தபோத அவர் இவற்றைக் கூறினார்.

தமிழ்நாட்டில் ஒரு ரூபாவுக்கு ஒரு கிலோ அரிசி, 50 ரூபாவுக்கு 10 வகையான மளிகைப் பொருட்கள் திட்டம் என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக இதுபோன்ற மக்களுக்கான திட்டங்களை நாங்கள் அரசுக்கு எடுத்துச்சொல்லியும் கண்டுகொள்ளாத தி.மு.க. அரசு இப்போது எந்த நோக்கத்திற்காக இத்திட்டங்களைச் செயற்படுத்துகின்றது என்று தெரியவில்லை.

சேது சமுத்திரத்திட்டம் குறித்துத் தெளிவான நிலையை மத்திய மாநில அரசுகள் சொல்லவேண்டும். சேது திட்டத்தில் கருணாநிதி தயங்கி நிற்பது ஏன்?

இலங்கைப் பிரச்சினையில் அரசியல் தீர்வுகாண மத்திய, மாநில அரசுகள் முயற்சி மேற்கொள்ளவேண்டும். அங்கு அமைதி ஏற்பட்டு மக்கள் நிம்மதியாக வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

(அ-ஒ)

# 26 அகதிகள் தமிழகம் வருகை 5 பேர் மாயம்; பொலீஸார் தேடுதல்

இராமேஸ்வரம், செப். 20

இலங்கையிலிருந்து அகதிகளாக நேற்று முன்தினம் இராமேஸ்வரம் வந்தவர்களில் ஐந்து பேர் மாயமானதைத் தொடர்ந்து அவர்கள் விடுதலைப் புலிகளாக இருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிஸார் தீவிரமாகத் தேடி வருகின்றனர் எனத் தமிழக நாளேடுகள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்த முழு விவரம் வருமாறு-

இலங்கை வவுனியா மற்றும் மன்னாரைச் சேர்ந்த 8 அகதிகள் கடந்த புதனன்று மாலை தலைமன்னார் கடற்கரையிலிருந்து படகில் புறப்பட்டு நள்ளிரவில் அரிச்சல் முனைக் கடற்கரைக்கு வந்தனர். இரவு முழுவதும் தனுஷ்கோடியில் தங்கிய இவர்கள் நேற்றுமுன்தினம் காலை தனுஷ்கோடிப் பொலிஸ் நிலையத்துக்கு வந்தனர்.

இதேவேளை, தலைமன்னாரிலிருந்து கடந்த புதனன்று நள்ளிரவில் மற்றொரு படகில் புறப்பட்ட எட்டு அகதிகள் நேற்று முன்தினம் அதிகாலை அரிச்சல்முனைக் கடற்கரைக்கு வந்தனர். இவர்களில் மூன்று பேர் மட்டும் தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்திற்கு வந்தனர். மற்ற ஐந்துபேர் என்ன ஆனார்கள் எனத் தெரியவில்லை. இரண்டு படகிலும் வந்த 21 அகதிகளையும் பொலிஸார் விசாரித்து மண்டபம் முகாமுக்கு அனுப்பிவைத்தனர்.

இரண்டாவது படகில் வந்த அகதிகளில் பாலேந்திரன், கரன் என்பவர்கள் கூறுகையில்:-

''நள்ளிரவில் தலைமன்னார் தாழ்வுபாடு கடற்கரையிலிருந்து எட்டுப் படகில் புறப்பட்டோம். அதிகாலையில் தனுஷ்கோடி அரிச்சல்முனைக் கடற்கரையில் இறங்கி முகுந்தராயர் சத்திரம் பொலிஸ் நிலையத்திற்கு நடந்துவந்தோம். எங்களுடன் வந்தவர்களில் ஐந்து பேர் வேகமாக நடந்து சென்றனர். எங்களால் அவர்களுடன் சேர்ந்து நடக்கமுடியவில்லை.

அவர்கள் தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்திற்கு வரவில்லை. அவர்கள் எங்குசென்றனர் எனத் தெரியவில்லை'' - என்றனர்.

தலைமறைவான ஐந்து பேரையும் புலனாய்வுத்துறையினர் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

(அ-ஒ)

## கோழி முட்டைக்குள் பாம்புக்குட்டி! பீகாரில் நடந்த விநோதச் சம்பவம்

சமஸ்தியூர்,செப்20

கோழி முட்டைக்குள் பாம்புக்குட்டி இருந்த விநோதச் சம்பவம் பீகார் மாநிலம் சமஸ்திபூர் மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள சாம்து கிராமத்தில் வசிக்கும் கிஷோர் ஜெகதீஷ் குமார் என்பவர் தனது நண்பரான பகதூர் ராம் என்பவரிடம் கோழி முட்டையை வாங்கியுள்ளார்.

'ஒம்லெட்' போடுவதற்காக அந்த முட்டையை அவர் உடைத்த போது அதற்குளிருந்து சுமார் 5 அங்குலம் நீளமுள்ள பாம்புக்குட்டி ஒன்று வெளியே வந்துள்ளது.

உடனே ஜெகதீஷ் குமார் இது பற்றி பகதூர் ராமிடம் கூறியுள்ளார். இதை நம்பாத பகதூர் ராம் வேறு ஒரு கோழி முட்டையை எடுத்து உடைத்துப் பார்த்துள்ளார்.

அந்த முட்டைக்குள் இருந்தும் சுமார் 3 அங்குல நீளமுள்ள பாம்புக்குட்டி ஒன்று வெளியே வந்துள்ளது. இதுபற்றி தகவல் அறிந்த கால்நடைத்துறை அதிகாரிகள் அந்த கிராமத்திற்கு விரைந்து சென்று முட்டைகளை இட்ட கோழி, அந்த முட்டைகள் மற்றும் முட்டையிலிருந்து வெளியேறிய பாம்புக்குட்டி ஆகியவற்றை ஆராய்ச்சிக்காக பெற்றுச் சென்றனர்.

கோழி முட்டைக்குள் பாம்புக்குட்டி கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் ஆச்சரியம் அளிப்பதாகவும், இதை நம்ப முடியவில்லை என்றும் கால் நடை மருத்துவர் குமார் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து கோழி முட்டைகளை வாங்கி சாப்பிட அந்த கிராம மக்கள் அஞ்சுகின்றனர். இதனால் அங்கு முட்டை வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### திருமதி கோசலராணி திருலோகஈஸ்வரா

அரியாலையைப்பிறப்பிடமாகவும், திருகோணமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோசலராணி திருலோகஈஸ்வரா நேற்று (19.09.2008) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீவரத்தினம் - புஸ்பராணி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - இராசம்மா தம்பதியினரின் மருமகளும் திருலோகஈஸ்வராவின் (நில அளவையாளர், நீர்ப்பாசனத்திணைக்களம், திருகோணமலை) அன்பு மனைவியும் துவாரகனின் (பொறியியலாளர், சிங்கப்பூர்) பாசமிகு தாயாரும் உருத்திரா, இந்திராணி, ஜீவேந்திரா, கேமலராணி, பூமாராணி, புஸ்பேந்திரா, ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை , தர்மலிங்கம், தியாகராஜா, சரஸ்வதி, பிரகலாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் திருகோணமலையில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (20.09.2008) சனிக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*24, புறாடி லேன்,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*
T.P: *0714810305*

*தகவல்:*
*திருமதி இராசரத்தினம் சரஸ்வதி (மைத்துனி)*

(A)

# அகில இலங்கை ரீதியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துணையாக இருந்தவர்கள் எனது பெற்றோர் மற்றும் இவ் வித்தியாலய அதிபர், வகுப்பாசிரியைகள், ரியூசன் ஆசிரியர் தவயோகராசா ஆகியோர்.

எனது தந்தை மிருசுவில் அரச தமிழ்க்கலவன் பாடசாலையிலும் தாயார் (செல்வராணி தர்மலிங்கம்) மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திலும் ஆசிரியர்களாக இருக்கின்றனர்.

எழுதுமட்டுவாழ் வடக்கு, மருதங்குளம் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்ட நான் எழுதுமட்டுவாழ் அ.த.க. பாடசாலையில் தரம் 1, 2, 3 ஆகிய வகுப்புகளிலும் பின்னர் தரம் 4,5 வகுப்புகளில் இவ் வித்தியாலயத்திலும் கல்வி பயில்கின்றேன்.

இவ் வித்தியாலயத்தில் எனது வகுப்பாசிரியர்களாக் கடமையாற்றும் திருமதி அ.யோகராசா, திருமதி ஆ.சர்வேந்திரன் ஆகியோரும் ரியூசன் ஆசிரியர் க.தவயோகராசாவும் எனது இந்த வெற்றிக்கு பெரிதும் உதவினர். அத்துடன் சுயமாக கற்கும் பழக்கம் இருந்ததால் பத்திரிகைகளில் வெளியான ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்களை செய்து பழகியதால் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெறும் வாய்ப்பு கிடைத்தது என எண்ணுகிறேன்.

உதயன் பத்திரிகையின் அனுசரணையுடன் ''[illegible]'' [illegible] நடத்திய வெற்றித் தேர்வுப் பரீட்சையில் முதலிடம் பெற்ற எட்டு பேரில் நானும் ஒருவன்.

புலமைப் பரிசில் பரீட்சையில் முதலாம் பகுதி கஷ்டமாக இருந்தபோதிலும் இரண்டாம் பகுதி சுலபமாக இருந்ததால் பரீட்சையில் சித்தி பெறுவேன் என்ற நம்பிக்கை இருந்தது.

பரீட்சை எழுதி ஒரு மாதத்தில் (ஆகஸ்ட் 17 - செப்.-19) பரீட்சைப் பெறுபேறு வெளியானமையும் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது.

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்கள் - என்றார் பாசுபதன்.

கடந்த வருடம் இவ்வித்தியாலயத்தில் தரம் 4 வகுப்பில் இணைந்த தர்மலிங்கம் பாசுபதன் மிகுந்த அக்கறையுடன் கல்வி கற்று வித்தியாலயத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்ந்தவர்-

இவ்வாறு பாராட்டுத் தெரிவிப்பவர் வித்தியாலய அதிபர் கு.சிவானந்தன்.

வலயத்தினால் நடத்தப்படும் அனைத்துப்போட்டிகளிலும் பங்குபற்றி இந்த மாணவன் முதலிடங்களைப் பெற்றதால் புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெறுவார் என்ற நம்பிக்கை எமக்கு நிறைய இருந்தது-

இவ்வாறு உணர்ச்சி பொங்க கருத்துத் தெரிவித்தவர்கள் வகுப்பாசிரியைகளான திருமதி அ.யோகராசா, திருமதி ஆ.சர்வேந்திரன்.

(அ-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னிப்படை நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆஸ்திரேலியாவில் கவன ஈர்ப்புப் போராட்டம்

இராணுவ நெருக்குவாரங்களினால் மனிதப் பேரவலத்தை எதிர்நோக்கியிருக்கும் வன்னி மக்களுக்கு உடனடி மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ளும்படியும் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்படியும் கோரி ஆஸ்திரேலியாவில் உள்ள புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் தலைநகர் கன்பராவில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழ் அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கன்பராவில் உள்ள ஆஸ்திரேலிய நாடாளுமன்றக் கட்டடத்துக்கு முன்பாகவும் பின்னர் அதற்கு அருகிலுள்ள. ஆஸ்திரேலியாவுக்கான இந்தியத் தூதரகத்துக்கு முன்பாகவும் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

கடந்த 17ஆம் திகதி (புதன்கிழமை) முற்பகல் 9.30 மணியளவில் ஆஸ்திரேலிய நாடாளுமன்ற கட்டடத்துக்கு முன்பாக திரண்ட தமிழ் மக்கள், தாயகத்தில் தமது உறவுகளுக்கு எதிராக இலங்கை அரசு மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கையை நிறுத்தக்கோரி - இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைக்கு எதிரான வாசகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியவாறு முழுக்கமிட்டனர்.

ஆஸ்திரேலிய அரசே! இலங்கையில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் அவலம் தொடர்பில் இனிமேலும் பொறுமை காக்க வேண்டாம் என்று நீளமான பதாகையில் எழுதிய வாசகத்துடன் அங்கு மக்கள் திரண்டிருந்தமை உணர்வுபூர்வமாகக் காணப்பட்டது.

பேராட்டத்தில் பேசியவர்கள் - மஹிந்த அரசின் இராணுவ கொடுமைகளை எடுத்துக்கூறினர். மனிதப்பேரவலத்தை எதிர்நோக்கியுள்ள வன்னியிலிருந்து 11க்கும் அதிகமான அரசு சாரா்பற்ற உதவி அமைப்புக்களை வெளியேற்றியுள்ள மஹிந்த அரசின் நடவடிக்கையைக் கண்டித்து இதனை உலக நாடுகள் புரிந்து தமிழ் மக்களுக்கு உதவவேண்டும் என்று வலியுறுத்தினர்.



நேற்றுமுன்தினம் வன்னிக்களமுனைக்கு விஜயம் செய்த இராணுவத் தளபதி சரத்பொன்சேகா அங்கு நிலைமைகளை அவதானிக்கிறார்.

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சியாளர்களை திரும்பப் பெறவேண்டும் என்றும், கூட்டணி உறவுகளைக் கடந்து தமிழக அரசியல் கட்சிகள் ஓரணியில் திரண்டு ஈழத்தமிழர்களைக் காக்க குரல்கொடுக்க வேண்டும் என்றும் கோரிக்கைகளை முன் வைத்துஇந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறவுள்ளது என ஒழுங்கமைப்பாளர்கள் அந்த அழைப்பில் தெரிவித்துள்ளனர்.

தமிழ் படைப்பாளிகள் முன்னணியின் அமைப்பாளரும் எழுத்தாளருமான இராசேந்திரசோழன், அந்த முன்னணியின் செயலாளரும் படைப்பாளியுமான பா. செயப் பிரகாசம், கவிஞர் இன்குலாப், ஓவியர் புகழேந்தி ஆகிய நால்வரும் கையெழுத்திட்டுள்ள இந்த அழைப்பானது, அனைத்து படைப்பாளிகளும் மனிதநேயப் பற்றாளர்களும் கலந்து தமிழீழ மக்களின் இன்னல் போக்க ஒன்றிணைந்து பங்களிக்குமாறு அறைகூவல் விடுத்துள்ளது.

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேர் வரை இதுவரை டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப் பட்டுள்ளனர்.

நாட்டின் சகல மாவட்டங்களிலும் உள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் டெங்கு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு தெரிவித் துள்ளது. (அ-சி)

## விசுவமடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசுவமடு மக்கள் குடியிருப்புகள் மீது நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் விமானப் படையினர் இந்தக் குண்டுத்தாக்குதலை நடத்தினர்.

இதில் அழகு கிருஸ்ணவேணி (வயது 47) என்பவர் கொல்லப்பட்டார்.

கொல்லப்பட்டவர், கிளிநொச்சி உதய நகர் மேற்கிலிருந்து இடம்பெயர்ந்தவர் ஆவார். அன்னலட்சுமி (வயது 43) மற்றும் உதயா ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-சி)

## நியூயோர்க்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியேற்றியதைக் கண்டித்தும் -

வன்னியில் அல்லற்படும் மக்களுக்கு உதவி செய்யு மாறு ஐ.நாவை வேண்டியும் - இந்தப் பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது லண்டன் போய்ச் சேர்ந்திருக்கும் இலங்கை ஜனாதிபதி எதிர்வரும் புதன்கிழமை நியூயோர்க் வரு வதற்கு ஏற்பாடாகி உள்ளது. (அ-1)

## நெடுந்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போயிருந்தார் என்று அவர்கள் தெரிவித்தனர்.

ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகாதேவன் முன்னிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் வைத்து நேற்று மாலை சடலத்தை அவர்கள் அடையாளம் காட்டினர்.

இந்தியத் தூதரக அதிகாரி வினைல் குமாரின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் வந்ததாக நீதிவானிடம் தெரிவித்த அவர்கள்-

தல்யாத்திரை புறப்பட்ட இவர் திருப்பதியில் இருந்து இரா மேஸ்வரத்துக்கு ரயிலில் செல்லும் போது கடலில் தவறி வீழ்ந்திருக்கலாம் எனவும் தெரிவித்தனர்.

சடலத்தை யாழ்ப்பாணத்தில் இந்து முறைப்படி தகனஞ்செய்ய அவர்கள் விருப்பம் தெரிவித்ததையடுத்து அதற்கான ஏற்பாடுகள் குறித்து இன்று அறிவிப்பதாக நீதிவான் தெரிவித்தார். (அ-01)

## கிளிநொச்சி, முல்லைத்தீவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாடடுப் பிரதேசத்தில் பருப்பு, சீனி, மா, தேங்காய் எண்ணெய் போன்ற சில உணவுப் பொருள் வகைகளுக்கும் மற்றும் சில அத்தியாவசியப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள முல்லைத்தீவு; கிளிநொச்சி மாவட்டப் பிரதேசங்களுக்கு வழக்கமாக தினசரி குறைந்த பட்சம் இருபது லொறிகளிலாவது உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவது வழமை.

ஆனால், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிர தேசத்திலிருந்து உள்நாட்டு - வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்கள் மற்றும் ஐ.நா. அமைப்புகள் வெளியேறிய பின்னர் -

அங்குள்ள மக்களின் மனிதாபிமானத் தேவைகளை நிறைவுசெய்யும் பொறுப்பை அரசு பொறுப்பேழ்பதாக அறிவித்த பின்னர்-

கடந்த சுமார் ஒரு வாரகாலமாக சொற்ப எண்ணிக்கையிலேயே லொறிகள் ஓமந்தைச் சோதனைச் சாவடியைக் கடந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் சென்றிருக்கின்றன என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இதனால் அங்கு சில முக்கிய பொருள்களுக்கு தட்டுப்பாடு விரைவில் ஏற்படும் சாத்தியங்கள் தென்படுகின்றன.

மேலும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் - ஏ 9 வீதியை அண்டி - தொடர்ந்து ஷெல்கள், பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்து வருவதும் -

ஓமந்தைச் சோதனைச் சாவடி ஊடான லொறிகளின் போக்குவரத்துக்குத் தேவையற்ற கட்டுப்பாடுகள், கெடுபிடிகள் விதிக்கப்படுவதும் -

லொறிப் போக்குவரத்து ஸ்தம்பித நிலைமை எட்டுவதற்குப் பிரதான கார ணம் என்றும் விமர்சிக்கப்படுகின்றது. (அ-சி)

## கடற்படை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக ஸ்ரீலங்கா கடற்படையின் 30 படகுகள் கொண்ட புதிய சிறப்புத் தாக்குதல் அணியை கடற்புலிகள் அணி வழிமறித்து கடும் எதிர்த் தாக்குதலை நடத்தியது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மு.ப 10.30 மணியளவில் தாக்குதல் தொடங்கியது. விடுதலைப்புலிகளின்சிறியபடகுகளைக் கொண்ட தாக்குதல் அணியே ஸ்ரீலங்காக் கடற்படையின் புதிய 'ரிஜிட்' கடற்படைக் கொமாண்டோ அணியை முறியடித்துள்ளது.

தலைமன்னாரில் தளம் அமைத்துள்ள கடற்படைக் கொமாண்டோ படகு அணி இரணைதீவு நோக்கி பெருமெடுப்பில் முன்னகர்ந்த போது புலிகளின் அணி இந்த் முறியடிப்புத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்தத் தாக்குதலில் கடற்படையினர் வலுவான போர்க்கலங்களைக் கொண்ட படகுகள் இரண்டு சேதமாகியுள்ளன. அதனைக் கட்டியிழுத்தவாறு ஏனைய படகுகள் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் பின்வாங்கி ஓடின - என்று விவரிக்கப்பட்டுள்ளது. (அ-1)

## புலமைப்பரிசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள பாடசாலைகளுக் கான முடிவுகள் இன்று அவற்றுக்கு வழங்கப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்தது.

ஆயினும் யாழ்.மாவட்டத்துக்கான முடிவுகள் நாளைமறுதினம் திங்கட்கிழ மையே விமானம் மூலம் யாழ்ப்பாணத் திற்கு அனுப்பப்படும் என்று பரீட்சைத் திணைக்கள வட்டாரங்கள் கோடிகாட்டின.

பரீட்சை முடிவுகளை இணையத்தளம் மூலம் வெளியிட ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது. பெரும்பாலும் திங்கட்கிழமைக் குள் சகல பாடசாலை களின் பெறுபேறுகளும் இணையத் தளத்தில் பார்வையிடக்கூடியதாக இருக்கும் என்றும்மேலும்தெரிவிக்கப்பட்டது.

எனினும் புலமைப்பரிசில் பரீட்சையின் உச்சப்புள்ளி பெற்றவர்களின் விவரங்கள் புலமைப்பரிசிலுக்குத் தகுதி யானவர்கள் ஆகிய விவரங்கள் இன்று உத்தியோகபூர்வ மாக வெளியிடப்படும் என்றும் பரீட்சைத்திணைக்கள வட்டாரங்கள் பிரஸ்தாபித்தன. யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய மாவட்டங்களுக்கான வெட்டுப் புள்ளி 117 என நேற்று அறிவிக்கப்பட்ட பேரதும் உத்தியோகபூர்வமான வெட்டுப் புள்ளி விவரம் இன்று வெளியிடப்படும் என்று பரீட்சைத்திணைக்கள வட்டா ரங்கள் நேற்றிரவு மேலும் தெரிவித்தன.

இதேவேளை, இப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் மூன்று மாணவிகள் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.குறித்த மூன்று மாணவிகளும் 183 புள்ளிகளைப்பெற்றுமுதனிலைவகிக்கின்றனர்.

கொழும்பு சிறிமாவோ பண்டாரநாயக்க மகளிர் பாடசாலையில் கல்வி பயிலும் மஹிந்தனி அமாசா ஹபுவாராச்சி, பம்பலப்பிட்டி லிண்ட்யே மகளிர் பாடசாலையின் சஜினி அஞ்சனா சேனாதீர மற்றும் புத்தளம் புனித அன்றூ மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த அபேசிங்கசே தோன மனீசா சபிர் ஆகியோரே இவ்வாறு முதனிலை வகிக்கின்றனர்.

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 2 லட்சத்து 65 ஆயிரம் மாணவ மாணவியரில் 30 ஆயிரம பேர் பிரபல பாடசாலைகளில் அனுமதி அல்லது புலமைப்பரிசில் பணத் தினைப் பெற்றுக்கொள்ளத் தகுதி பெற்றுள்ளனர் - என்று தெரியவருகிறது. (அ-1)

## காரில் சென்ற ஐந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பெற்றோர் மருதானை, கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையங்களிலு ம் மலையக மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் வாழ்க்கைத்தொழில், தொழில்நுட்ப பயிற்சி பிரதி அமைச்சருமான பெ. ராதாகிருஷ்ணனிடமும் புகார் செய்துள்ளனர்.

-கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த என். ரஜீவ் (21 வயது), விஸ்வநாதன் பிரதிப் (17 வயது), ராமலிங்கம் திலகேஸ் (17 வயது), மருதானையைச் சேர்ந்த மொஹமட் டிலான் (24 வயது), மொஹமட் சஜித் (24 வயது) ஆகிய ஐந்து பேருமே காணாமல் போயுள்ளார்கள் என மருதான்ன, கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் பயணஞ்செய்த டபிள்யு. பி. கே. சி. 5559 என்ற இலக்கமுடைய கறுப்பு நிற 'டாட்டா இண்டிக்க' காரும் மாயமாகியுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப் ப ட்டுள்ளது.

கடந்த 17ஆம் திகதி புதன்கிழமை இரவு 10.45 மணியளவில் பம்பலப்பிட்டிக்குச் செல்வதாகப் புறப்பட்டுச் சென்ற ஐவரும் நேற்று மாலை வரை வீடு திரும்பவில்லை என்று அவர்களின் பெற்றோர் பிரதி அமைச்சரிடம் தெரிவித்தனர்.

நண்பர்கள், உறவினர்கள், பொலிஸ் நிலையங்கள் உட்பட பல இடங்களிலும் தேடியும் இவர்கள் ஐந்து பேர் தொடர்பாக எதுவிதத் தகவலும் பெறமுடியவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போயுள்ளவர்களில் என். ரஜீவ் கொட்டாஞ்சேனை சப்பாத்து வீதியையும் (ஷூறோட்), திலகேஷ் புளுமெண்டல் தொடர் மாடியையும், பிரதீப் வாசல வீதியையும் சேர்ந்தவர்கள். இவர்களில் பிரதீப் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவர் என்றும் திலகேஷ் என்பவர் நீக்கலஸ் வித்தியாலயத்தில் கல்வி பயில்பவர் என்றும் பெற்றோர் தெரிவித்தனர்.

இவர்கள் கடத்தப்பட்டார்களா அல்லது கைது செய்யப்பட்டார்களா என்று அறியத் தருமாறு பெற்றோர் பிரதி அமைச்சரிடம் கோரியதை அடுத்து பொலிஸ்மா அதிப ருக்கு கடிதம் மூ ல ம ா க வு ம் , சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ன வுக்கு தொலை பேசி மூலமும், பிரதி அமைச் சர் இது குறித்து அறிவித் துள்ளார். (அ-சி)


**Microsoft Certified**
**Systems Engineer / Administrator**
- குறுகியகால நிறைவான வகுப்புக்கள்
- Microsoft நிறுவன அதிபர் Bill Gatesஇன் கையொப்பத்துடன் கூடிய சர்வதேச தர சான்றிதழ்
- Network Manager, System Admin., System Engineer போன்ற வருமானம் கூடிய வேலைவாய்ப்பு
- வெளிநாட்டு விசாவிற்கான மேலதிக புள்ளிகள்

புதிய பிரிவுகள் ஆரம்பம் 22.09.2008 08.00AM


**Become an Engineer**
விபரங்கள் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com



**வாடகைக்குத் தேவை**
யாழ் நகரப் பகுதியில் கடை ஒன்று வாடகைக்குத் தேவை.(பஸ் நிலையப் பகுதியை அண்மித்ததாக இருத்தல் விரும்பத்தக்கது)
தொடர்பு: [illegible]




**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



தரம்:-4 முதல் வெற்றித்தேர்வு வினாப்பத்திரத்தை தொடர்ச்சியாகச் செய்து, செயலமர்வில் கலந்து கொண்டு அகில இலங்கையில் முதலிடம் பெற்ற வெற்றித் தேர்வு நாயகன் - 2008 செல்வன் தர்மலிங்கம் பாசுபதன் (மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்) அவர்களையும் அவரை நேரடியாக வழிப்படுத்திய வெற்றித் தேர்வு இணை ஆசிரியர்

திரு.K.தவயோகராசா



அவர்களையும் உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வெற்றித் தேர்வு ஆசிரியகுழாம், திரு.S.கணேசலிங்கம் ADE யாழ். மாவட்ட இணைப்பாளர்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.09.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.